PEARL PUBLICATIONS

50 nP

1802
231

# திறந்த வாயில்

ஹெலன் கெல்லர்



# திறந்த வாயில்

ஹெலன் கெல்லர்

(THE OPEN DOOR: *Helen Keller*)

41

41

ACC-MKU 00690

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

மொழிபெயர்ப்பு:

" இளங்கோவன் "

10-7-73

57

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1899
நன்கொடை எண்: 1899

பெர்ல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்,
பம்பாய் 1.

விலை 50 நயே பைசே

## அங்கீகாரங்கள்

இந்நூலின் சில கட்டுரைகள் செஞ்சுரி கம்பெனி (Century Company)யின் வெளியீடான 'நான் வாழும் உலகம்' (The World I Live In) என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை; வேறு சில, ஹெலன் கெல்ல (Helen Keller) ரால் 1926, 1954-காப்பிரைட் உரிமை பெற்ற, 'என் வாழ்வின் சாவி' (My Key of Life) என்ற நூலிலிருந்து எடுத்தவை. இது நியூயார்க் (New York) பிரசுரகர்த்தாக்களான தாமஸ் ஒய். க்ரோ வெல் கம்பெனி (Thomas Y. Crowell Company)யார் வெளியிட்டது. மற்றும் சில லெஸ்லி ஃபுலென்வைடர் (Leslie Fulenwider) இன் கார்ப்ப ரேஷன் வெளியிட்ட 'இழந்த நாங்கள்' (We Bereaved) என்ற நூலி லிருந்தும்; பின்னும் சில டபிள்டே அண்ட் கம்பெனி (Doubleday & Company Inc) இன்கார்ப்பரேஷன் வெளியீடுகளான 'என் கதை' (The Story of My Life), 'இருளுக்கு வெளியே' (Out Of The Dark), 'என் சமயம்' (My Religion), 'ஆற்றுமத்தி' (MidStream), 'ஹெலன் கெல்லர் குறிப்புகள்' (Helen Keller's Journal), 'நாம் நம்புவோமாக' (Let us Have Faith) என்பவைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டவை.

1902, 1903, 1905, 1926, 1929, 1938, 1940, 1954, 1957 காப்பிரைட் © உரிமை ஹெலன் கெல்லருடையது.

1929—காப்பிரைட் உரிமை லெஸ்லி ஃபுலென்வைடர் இன் கார்ப்பரேஷனுடையது.

1927—காப்பிரைட் உரிமை டபிள்டே அண்ட் கம்பெனி இன் கார்ப்பரேஷனுடையது.

1912—காப்பிரைட் உரிமை பிலிப்ஸ் பப்ளிஷிங் கம்பெனியுடையது.

1906—காப்பிரைட் உரிமை கர்ட்டிஸ் பப்ளிஷிங் கம்பெனி யுடையது.

1905—காப்பிரைட் உரிமை பெர்ரி மேஸன் கம்பெனியுடையது.

1904, 1908—காப்பிரைட் உரிமைகள் செஞ்சுரி கம்பெனி யுடையது.

---

ஆங்கில மூலத்தின் முதலாவது தமிழ் மொழிபெயர்ப்பு. மறுபதிப்புக் குரிய எல்லா உரிமைகளும் வெளியிடுவோரைச் சார்ந்தவை.

பம்பாய்-1,—மஹாத்மா காந்தி ரோட், நெ. 170, வாட்டர்லூ மான் ஷன்ஸ் 12-ஆம் நெம்பரிலிருந்து செயல்புரியும் பேர்ல் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டுக்காக ஸ்ரீ. ஜி. எல். மிர்சந்தானியால் வெளியிடப்பட்டது.

அச்சிட்டோர்: ராயல் அச்சகம், மவுண்ட் ரோட், சென்னை-2

10-1554 235



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27-1-1979**

# பாயிரம்

“எழுபது ஆண்டுகளுக்கு முன் ஒரு ஏழு வயதுக் குழந்தை—குருடு செவிடு, ஊமை—இழுபட்டாள், இடிபட்டாள், தூண்டப்பட்டாள், இன்பமுற்றாள், ஏமாப்புற்றாள், ஆரவாரித்தாள், அல்லாடினாள், கிண்டலுக்காளானாள், கிச்சூட்டப் பெற்றாள், கண்காணிப்புற்றாள், சிம்மம் போன்று வலிய சிந்தை படைத்த ஓர் ஆசிரியையால் அன்பு பாராட்டப் பெற்றுச் சிந்தனை உலகிற் புகுந்தாள். இக்குழந்தையே ஹெலன் கெல்லர். இருபத்தொரு வயதான, எதற்கும் கலங்காத ஆன்னி ஸல்லிவன் என்பவர் இக் குழந்தையின் ஆசிரியை. இவ்வாசிரியையின் உடைபடாத உறுதியும், உக்ரமான, எனினும் ஓய்வற்ற அன்பும் ஹெலனது மூளையின் வெறுமையான கரும்பலகை (Slate) யில் உயர்வான உபதேசங்களைத் தீட்டின. ஆன்னி, உறங்கிய ஹெலனது உள்ளத்தை எழுப்பினாள்; சிந்திக்க வார்த்தைகளைத் தந்தாள்; சென்ற ஐம்பது வருடகாலமாக ஆண் பெண் அடங்கலுமான மக்கள் உள்ளங்களுள் அச்சிந்தனைகள் குடியேறிய பிரயாணத்தில் உற்ற துணையாய் நின்றாள்.”

“இன்று ஹெலன் கெல்லரைப் பற்றி உலக முழுவதிலும் பல கோடிப் பேர்களுக்குத் தெரியும். அவள் குருடி, செவிடி, என்பதாலல்ல. ஆயிரக்கணக்கானவர்கள் குருடாயும், செவிடாயும் இருந்தனர், இருக்கின்றனர், இனிமேலும் இருப்பர். குருடும் செவிடுமாய் இருந்தும் அவள் எழுதவும், படிக்கவும், பேசவும் தெரிந்துகொண்டாள் என்பதற்காகவுமல்ல. குருடும் செவிடுமாயிருந்தும் மக்கள் யாவருடைய அறிவையும், இதயத்தையும் தொடக்கூடிய வண்ணம் ஆழ்ந்த தத்துவ தரிசனப் பாங்கில் அவளால் சிந்திக்க முடிந்தது என்பதற்காக; அச்சிந்தனைகளை பெரும் எழுத்தாளர்களும் பொறாமை படத்தக்க வகையில் எல்லோருக்கும் தெள்ளத் தெளியத் தெரிவிக்க முடிந்தது என்பதற்காகவுமே.

“ஹெலன் கெல்லர் ஒரு ஆச்சரியம், அற்புதம், கருணைவிலாசம், கல்விக்கரு” என்றெல்லாம் கூறுவர். அவர் ஒரு தத்துவமேதை, பெரிய எழுத்தாளர் என்பதை அவரது நூலின் பலப் பலப் பகுதிகளின் தொகுப்பான,—யான் மகிழ்ச்சியோடு யாவருக்கும் சிபார்சு செய்யும்—இந்நூலிலிருந்து தெரிந்துகொள்ளலாம்” என்று, கேதரைன் கார்னல் ஆங்கில மூலநூலுக்குத் தாம் எழுதிய முகவுரையில் கூறுகின்றார்: அவர் கூற்றை எழுத்துக்கெழுத்து அப்படியே நாம் ஆமோதிக்கிறோம். இந்நூலைத் தமக்கே உரித்தான அழகிய தமிழ் நடையில் திரு. இளங்கோவன் மொழிபெயர்த்துள்ளார். யாவரும் வாங்கிப் படிக்க வேண்டிய நூல்.

—பதிப்பாசிரியர்.

இன்பத்தின் ஒரு கதவு மூடும்போது, மற்றொன்று திறக்கிறது ; ஆனால், மூடிய கதவையே உற்று நோக்குவதில் நமக்காகத் திறந்திருக்கும் கதவை நாம் கவனிப் பதேயில்லை.

## உண்மையாகவே

இருளின் இதயத்தை நான் பார்த்திருக்கிறேன்; எனினும் ஸ்தம்பிக்கச் செய்யும் அதன் சக்திக்கு அடிபணிந்ததில்லை. ஆனால், காலைக் கதிரொளியில் என் உயிர் உலாவுகிறது. இலையுதிர் காலத்தில் உலர்ந்து விழும் சருகுகளைப் போல் இருண்ட - நம்பிக்கையற்ற எண்ணங்கள் என் பாதையில் எதிர்ப்பட்டால்தானென்ன? எனக்கு முன்னரே அவ்வழியே நடந்து சென்றோர் எண்ணற்றோர்! பாலைவனம்கூட, புத்துணர்வூட்டும் பொன் வயல்கள் - பழமுதிர் சோலைகள் இவற்றைப் போலவே இறைவன் இருக்குமிடம் நோக்கியே நம்மைக் கொண்டுசெல்கிறது. சிருஷ்டியின் அகண்டத்திற்கு முன்(னே) நான் ஓர் அற்பம். இதைக் கருதுங்கால் என் கர்வம் அடியோடு கவிழ்கிறது. 'கற்றது கைம்மண் அளவானால், கல்லாதது உலகளவு' என்பதையும் நான் உணர்கிறேன். பஞ்சேந்திரியங்களின் சுகானுபவங்களை எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகப் புரிந்து கொள்கிறேனோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக அவற்றின் பாதகங்களையும் புரிந்து கொள்கிறேன். வாழ்வின் அடிப்படையாக விளங்க அந்த இந்திரிய உணர்ச்சிமட்டும் போதாது என்பதும் எனக்குப் புரியாமலில்லை. நம்பிக்கையற்றவர்கள் - நம்பிக்கை உள்ளவர்கள் என்ற இரு

சாராரின் கருத்துக்களும் சமனப்படுத்தப்பட்டே அதிசாமர்த்தியத்துடன் என் முன் நிறுத்துக் காட் டப் பெறுகின்றன. அப்பொழுது என் நுண்ணிய அல்லது அதீதமான ஆன்மிக உணர்வின் சக்தியால் நடைமுறைக்குகந்த ஒரு நல்வாழ்க்கைத் தத்து வத்தை என்னுல் பின்பற்ற முடிகிறது. என் இச்சா சக்தியைக் கொண்டே ஜீவனுள்ளதைத் தேர்ந் தெடுத்து - அதற்கு எதிர்மறையான சூன்யத்தை நிராகரிக்கிறேன்.

இம் மண்ணுலக வாழ்க்கைக்கு அப்பால் மற்றொரு வாழ்வு இல்லையென்றால் எனக்குத் தெரிந்த சிலர் நம் கண்ணிய நினைவின் காரணமாக அமரத்துவம் அடைந்தே இருப்பர். என் நேச நண்பர்களில் எவரேனும் மண் மாதாவினால் அரவணைக்கப்படுகையில் என்னில் ஒரு பகுதியும்தான் அங்கு புதையுண்டு போகிறது. இருந்தும் என் இன்பத்திற்கும், திடத்திற்கும், தெளிவிற்கும் அவர்கள் ஆற்றிய உதவி மாறிப் போன இந்த உலகத்தில் எனக்கு உற்றதோர் நற்றுணையாகவே விளங்குகிறது.

இறைவன் நமக்கு வாழ்வளித்திருப்பது இன்பத்திற்கே; துன்பத்திற் கல்ல - இது நிச்சயம். அதிகப்பட்ட இன்பத்தால் மனித சமுதாயம் சோம்பிவிடாது; சிரத்தையற்று விடாது;—இது என் திட நம்பிக்கை. துன்பம், தோல்வி, பிரிவு, மரணம் ஆகியவை என்றும் எப்பொழுதும் இருந்தே வரும்—இது இயற்கையின் நியதி. உலக நாகரிகத்தின் அபாயகரமான பரிசோதனைகளும் குழப்பங்களும் குவியக் குவிய துன்பமும், தோல்வியும், மரணமும், பிரிவும் அதி பயங்கரமான அளவுக்கு விம்மியெழக்கூடும். ஆண்டவனின் அன்பளிப்பான இன்பத்தை அவரது குழந்தைகளும் அடையச் செய்ய வேண்டிய கடமை நம்முடையதே. உண்மையான இன்பம் உருவாக் கப்படுவது எவைகளால் என்பதைப் பற்றிப் பலரிடையே தவறான கருத்தே நிலவி வருகிறது. தன்னல நோக்குடன் செயலாற்றினுல் இன்பமும் தள்ளியே நின்றுவிடும்; நல்ல ஒரு இலட்சியமிருக்க வேண்டும்; அதனுடன் அந்தரங்க விசுவாசத்துடன் கலந்து இழையவேண்டும்; அப்போதுதான் அது மனிதனிடம் துள்ளிவரும். அந்த இன்பந்தானென்ன?—ஆரோக்கியம் என்பதைப் போன்ற வேறொரு மகத்தான வெற்றியைப் பெறுவதற்கான ஒரு சாதனமே யாகும்; ஆனுல், அதுவே

அதன் இறுதியாகாது. மனிதன் ஒவ்வொருவனுக்கும் இயன்றதோர் அளவுக்குத் தன் இச்சைப்படி வாழ்வது - தன் மனதிற்குப் பிடித்த மதத்தைத் தேர்ந்தெடுப்பது - தன் திறமைகளை அபிவிருத்தி செய்வது ஆகிய மறுக்க முடியாத உரிமைகள் உண்டு; அதேசமயம் பாடுபடாமல் பலனனுபவிக்க - ஏதும் செய்யாமல் இன்பம் துய்க்க - எவருக்கும் உரிமை கிடையாது; தன் பாரத்தை இன்னொருவன் தலைமீது சுமத்தவும் உரிமை கிடையாது.

பாதுகாப்பு என்பது பெரும்பாலும் மூட நம்பிக்கையே. இயற்கையில் அப்படி ஒன்றுமில்லை; மனிதப் பிறவிகள் அனைவரும் அதை அனுபவித்ததுமில்லை. கடவுளுக்கே பாதுகாப்பு என்பது கிடையாது; ஏனென்றால் அவர் தமது சிருஷ்டிகளின் மீதுள்ள ஆதிக்கம் முழுவதையும் மனிதனிடம் கொடுத்துவிட்டார். ஆபத்தை எதிர்நோக்காமல், ஒதுங்கிச் செல்வதன் மூலம் நீண்ட காலத்திற்குத் தப்பித்துக் கொள்ள முடியாது. தைரியசாலிகளைப் போலவே பயந்தவர்களும் அடிக்கடி சிக்கிக்கொள்கிறார்கள். எனவே, நம்பிக்கை ஒன்றுதான் சரியான பாதுகாப்பு. வாழ்க்கை என்பது துணிகரமான சாகஸமாயிருக்கும். அல்லது வெறும் சூனியமாயிருக்கும். மாறுதல்களை எதிர்நோக்கியவாறு விதியின் முன்னிலையில் சுதந்திர தேவதைகளைப் போன்று நடந்துகொள்ளுவது தோற்கடிக்க இயலாத பலத்தின் அறிகுறியாகும்.

நிரந்தரமான அமைப்பில் பாதுகாப்புடன் வாழுங் கருத்தை நமது பரம்பரையினர் கொண்டிருப்பது மிகப் பெரிய கேடு என்றே நான் அஞ்சுகிறேன். இது கற்பனையையும், சுய மதிப்பையும் பலவீனப்படுத்தி, சுதந்திரமாகத் தாங்களே தங்கள் தலைவிதியை நிர்ணயித்துக் கொள்வதற்கு

தகுதியற்றவர்களாக அவர்களை மாற்றிவிட்டது. தெய்வச் செயலால் நிகழும் சம்பவங்களும், சிதைந்துபோன பிரமைகளும் அவர்களைத் திணறவடித்துவிடுகின்றன. ஸ்திரத்தன்மை ஏற்படுமென்று அவர்கள் எதிர்பார்த்தனர்; ஆனுல் தங்களுக்குள்ளேயோ அல்லது பிரபஞ்சத்திலோ அதைக் காணமுடிவதில்லை. மாற்றத்தையும், எல்லா நெருக்கடிகளுக்கும் ஒத்த ஒழுக்க நியதிகளையும் தைரியமாக ஏற்றுக்கொள்வதன் மூலமே, மிகமிக உயர்ந்த கடமையை நிறைவேற்ற அவர்களால் முடியும்; இதை அவர்கள் கற்றறிந்து, பிறருக்கும் போதிக்கவேண்டும்.

கல்வியின் மூலம் ஏற்படக்கூடிய மிகமிகப் பெரிய விளைவு சகிப்புத் தன்மையே. நெடுங்காலத்திற்கு முன்னர் மனிதர்கள் ,தங்கள் நம்பிக்கைகளுக்காகப் போராடி உயிர் நீத்தனர். ஆனால், மற்றொரு வகைத் துணிவை-தங்கள் சகோதரர்களின் நம்பிக்கையையும், தத்தம் மனச்சாட்சிக்கேற்ப அவர்கள் வாழும் உரிமையையும் அங்கீகரிக்கும் துணிவை-அவர்களுக்குப் போதிக்கப் பல்லாண்டு காலம் பிடித்தது. சமூகத்தின் முதல் கொள்கை சகிப்புத்தன்மை; சகல மனிதர்களுடைய சிந்தனைகளில் மிகச் சிறந்ததைச் சேமித்துப் பாதுகாக்கும் உணர்ச்சி அதுவேயாகும். வெள்ளத்தாலும், இடி, மின்னலாலும் ஏற்படும் நஷ்டமோ, இயற்கையினுடைய விரோத சக்திகளால் நகரங்களுக்கும் கோவில்களுக்கும் ஏற்பட்ட நாசமோ, மனிதனுடைய சகிப்புத் தன்மையைப் போன்று, எண்ணற்ற உன்னதமான உயிர்களையும், உணர்ச்சிகளையும் அழித்துவிடவில்லை.

உள்ளத்துடன் கொள்ளும் எளிய நம்பிக்கை, நிலத்திலிருந்தோ, நீரிலிருந்தோ, தோன்றும் எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்துவிடும். எங்கு திரும்பினும் இன்னல்கள் நம்மை எதிர்நோக்குகின்றன: அவை வாழ்வின் துணைவர்கள். தனி மனிதர்களின் குணங்களும், பொதுவான சுபாவங்களும் கலப்பதனால் விளைபவையே அந்த இன்னல்கள். இவற்றை எதிர் நோக்குவதற்கு நிச்சயமான வழி ஒன்றுமட்டுமே உண்டு—நாம் சாகா வரம் பெற்றவர்கள்; நமக்கொரு **நண்பர்** இருக்கிறார்; அவர் கண்ணயர்வதுமில்லை; கடு நித்திரையிலாழ்வதுமில்லை; நம்மை எல்லாம் பரிபாலித்து நமக்கு வழி காட்டுகிறார் (நாம் அப்படிச் செய்ய அவரை அனுமதித்தால்) என்று அனுமானிப்பதே. நம் ஆன்மாவின் அடி ஆழத்தில் இந்த எண்ணம் நன்கு பதிந்துவிடுமாயின், அநேகமாக நாம் விரும்பும் எந்தக் காரியத்தையும் செய்துவிடலாம்; நாம் சிந்திக்கும் விஷயங்களுக்கொரு எல்லை வகுக்க வேண்டிய அவசியமும் இருக்காது. நம்மால் இயன்ற அளவிற்குப் பிரபஞ்சத்தின் அழகை எல்லாம் அனுபவித்துக்கொண்டே இருக்கலாம். புண்பட்ட போதெல்லாம் அதை ஆற்றும் கனிவு நிறைந்த அனுதாபத்தைப் பெறலாம். துன்பதிலிருந்தே

இன்பமும் பொறுமையும் நிறைந்த இனிய மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன; இசய்யாவின் உதடுகளில் முத்தமிட்டு, ஆவிக்கு உயிரளித்த புனித அக்கினியின் உருவம் தோற்றமளிக்கிறது; வானத்தில் நட்சத்திரங்கள் தோன்றும் மாலைப் பொழுதின் திருப்தியும் கிடைக்கப் பெறலாம். தாண்டிச் செல்லவேண்டிய பாறைகள் இல்லையென்றால், வளமிக்க அற்புதமான மனித அனுபவம் தான் அடையவேண்டிய இன்பத்தின் ஒரு பகுதியை இழந்துவிடும். இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கைக் கடந்து செல்லவேண்டிய வாய்ப்பு இராவிடில், மலையுச்சியில் கிடைக்கப்பெறும் ஆனந்தம் அவ்வளவு அற்புதமாயிராதே!

ஏதாவது விசேஷ ஆனந்தத்தை அனுபவிக்க ஒவ்வொருவருக்கும் கொஞ்ச நேரமாவது வேண்டுமென்பதில் ஐய மில்லை. அழகிய ஒரு மலரையோ, மேகத்தையோ நட்சத்திரத்தையோ பார்த்து ரசிப்பதற்கோ, ஒரு கவிதையைப் படித்து உற்சாகமற்ற ஒருவனுக்கு உற்சாகம் ஊட்டுவதற்கோ ஒவ்வொருநாளும் ஐந்து நிமிடமாவது அவசியம். அழகையும் ஆனந் தத்தையும் ஒத்திப்போட்டுக் கடமைக்காகவும் உறவினருக்காகவும் எப்போதும் கடுமையாக உழைப்பதால் பயன் என்ன? எழில் நிறைந்த புதுமையான இந்த நிரந்தர இன்பங்களை அனு மதிக்காவிடில், ஒளி உலகினின்றும் அவர்கள் தங் களை ஒதுக்கிக்கொள்ள வேண்டியதுதான்; சகல ஜீவிதப் பொருட்களின்மீதும் சோகம் தோய்ந்த புழுதிப்படலம் படர்ந்துவிடும். பூமியைப் பூரண மாகப் பாராட்டி அதிலுள்ளவற்றை அனுபவித்தா லன்றி, வானம் பூமியைவிடப் பிரகாசமாயிருக் கிறது என்பதில் அர்த்தமில்லை. பூமியின் அழகை நேசிப்பவருக்கே, சூரியோதயத்தின் காந்தியையும் நட்சத்திரங்களின் ஒளியையும் ரசிக்கும் உரிமை யுண்டு.

எதிர்காலத்தைப் பற்றி அதிகமாக நினைக்கமுடியாத அளவிற்கு நான் இந்த உலகில் ஆனந்தமாக வாழ்கிறேன். ஆனால், கடவுளுக்குச் சொந்தமான ஏதோ ஒரு அழகான இடத்திலே என் அன்பிற்குரிய நண்பர்கள் எனக்காகக் காத்திருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் ஞாபகப்படுத்திக் கொள்வதுண்டு. எத்தனையோ ஆண்டுகள் உருண்டோடிவிட்ட போதிலும்கூட, அவர்கள் எனக்கு மிகமிக அருகிலேயே இருப்பது போலத் தோன்றுகிறது. எனவே, எந்த நேரத்திலாவது என் கையைப் பற்றிப்பிடித்து, அவர்களின் மறைவுக்கு முன்னர் பேசியதுபோல அன்பு மொழிகள் கூறினால் நான் ஆச்சரியப்படமாட்டேன்.

மீட்சியைப் பற்றி மனிதர்கள் எவ்வளவு அற்புதமாக எழுதியிருக்கிறார்கள், பேசியிருக்கிறார்கள் என்பதை நினைக்கும்போது ஆச்சரியந்தான் தோன்றுகிறது. ஆயினும் அதனால் ஒன்றும் பலனில்லை, தன்னைத்தானே பண்படுத்திக்கொள்வது பூரணத்துவம் பெற வேண்டும் என்ற இலட்சியத்திற்குப் போதுமானது என்று பெருமையுடன் உரக்கக் கூவுகின்றனர். ஆனால், மிகச் சிறந்தவர்கள் கூறுவது அதற்கு எதிர் மறையாயுள்ளது. அவர்களில் சிலர் அளவிடற்கரிய அறிவுச் செல்வத்தை அடைந்துள்ளனர். பல கொடுமைகளைத் தீர்க்கும் வகைகளை விஞ்ஞானம் கண்டு பிடித்திருக்கலாம் என்பர். ஆனால் கொடிய வியாதிகளிலெல்லாம் கொடிய மனிதர்களின் மனச் சோர்வுக்கு ஏற்ற மருந்தை அது கண்டுபிடிக்க வில்லை.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1899
1899
நன்கொடை எண்:

கைகளை நீட்டிக் கதிரவன் கிரணங்களின் கனிவை அனுபவி; மென்மையான பூமலர்கள் உன் கன்னத்தை வருடட்டும், அவைகளின் மெல்லிய உருவங்களை உன் விரல்கள் தடவட்டும்; அவற்றின் லேசான வடிவ மாறுதல்கள், குழைவுகள், புதுமைகள் யாவற்றையும் உணரட்டும். வானில் பெருக்கெடுத்தலையும் காற்று வெள்ளம் உன் முகத்தைத் தழுவட்டும்; (வெறும்) வெட்ட வெளியின் விரிவை ஸ்வாசி; காற்றின் ஓய்வு ஒழிச்சலற்ற பல்வகையான செயல்களைக் கண்டு ஆச்சரியப்படு; தத்திவிழும் தண்ணீரிலும் பல்லாயிரக்கணக்கான தழைகுழைக் கிளைகளிலும் மேலும் மேலும் மிகுதியாக மிதந்து பாய்ந்துவரும் அகண்டமான கீதத்தை உன்னுள் அடுக்கடுக்காக அடுக்கிவை. இத்தகைய ஆழ்ந்த உணர்ச்சிமிக்க பண்பும் ஸ்பரிசமும் இருக்கும் வரையில் உலகம் ஏன் உளுத்து உதிரும்? ஏதோ ஒரு வனதேவதை காட்சி அல்லது ஸ்பரிச உணர்ச்சியில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்படி கூறினால் அதற்காக என்னுடைய உள்ளங்கையால் உணரும் உருவச் செல்வங்களையோ துல்லிய மாறுதல்களையோ, அவற்றின் பரிபூரணத்தையோ அன்பர்களுக்கு அன்பு மிகுந்த கரத்தணைப்பையோ நான் விட்டுவிட மாட்டேன்

அவ்வை தி.க. சண்முகம்

தீமை என்னவென்பது எனக்குத் தெரியும். ஒன்றிரண்டு தடவை நான் அதனுடன் போராடி யிருக்கிறேன். என் வாழ்க்கையில் அதனுல் ஏற்பட்ட கேட்டினை உணர்ந்திருக்கிறேன். எனவே, தீமை ஒருவகை மனப்பிராந்திதானே தவிர அவ்வளவு முக்கியத்துவம் உடையதல்ல என்று பூரண ஞானத்துடனேயே சொல்லுகிறேன். அதை நான் அனுபவித்திருக்கின்ற காரணத்தாலேயே திடமான நம்பிக்கையுடையவளா யிருக்கிறேன். தீமைதோற்றுவிக்கும் போராட்டம் மிகப் பெரிய வரப்ரசாதங்களுள் ஒன்று என்று நான் திடமாகக் கூறமுடியும். அந்தப் போராட்டம் நம்மை பிரயோசனமுள்ள மனிதர்களாக, உறுதியும் பொறுமையும் நிறைந்தவர்களாக மாற்றிவிடுகிறது. பொருட்களின் ஆன்மாவையே நாம் காணுமாறு செய்து, உலகில் துன்பமே நிறைந்திருந்தாலும் அதை வெல்வதற்கு உரிய மார்க்கங்களும் நிரம்ப இருக்கின்றன, என்று அது நமக்குப் போதிக்கிறது. எனவே, என்னுடைய திடமான நம்பிக்கை, உலகில் கேடுகளே இல்லையென்ற எண்ணத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லை: ஆனல் உலகில் நல்லவையே பெரும்பாலும் நிறைந்திருக்கின்றன என்ற சந்தோஷமான நம்பிக்கையையும், நல்லவையே

உலகில் நிலவும் பொருட்டு அவற்றுடன் ஒத்துழைக்க மனமார்ந்த முயற்சி அவசியம் என்ற கொள்கையையும் ஆதாரமாகக் கொண்டுள்ளது. ஒவ்வொன்றிலும், ஒவ்வொருவரிடத்திலும் மிகச் சிறந்தவற்றையே காண்பதற்குக் கடவுள் எனக்கு அளித்துள்ள சக்தியைப் பெருக்கிக்கொள்ள நான் முயற்சிக்கிறேன். அந்தச் சிறந்த அம்சங்களை என்னில் ஒரு பகுதியாக்கிக் கொள்ளவும் நான் முயலுகிறேன்; உலகெங்கும் நல்லவைகளே நிறைந்திருக்கின்றன! ஆனல், என்னுடைய சந்தோஷமான எண்ணங்களை நடைமுறை வாழ்க்கைக்கு, என்னுடைய சொந்தத் துறைக்கு - நான் பயன்படுத்திக் கொள்ளாவிடில் நன்மையின் ஒரு சிறு துளி அளவும் எனக்குக் கிட்டாது.

யாராவது ஒருவன், தன்னுடைய நல்ல மனத்தின் காரணமாக, மற்றொருவனுக்கு உதவியான வார்த்தையைக் கூறினாலோ, உற்சாகமூட்டும் வகையில் புன்னகை புரிந்தாலோ, அல்லது ஒருவனுடைய வழியிலுள்ள கரடுமுரடான பாகத்தை சமனப்படுத்தினாலோ, அதனால் தனக்கு ஏற்படக்கூடிய ஆனந்தம் தன்னிடமிருந்து பிரிக்க முடியாத ஒரு பகுதி என்பதை அறிவான்; எனவே, அந்த ஆனந்தத்தினாலேயே அவன் வாழ்கிறான். ஒருகாலத்தில் கடக்க முடியாது என்று நினைத்த முட்டுக்கட்டைகளைத் தாண்டிச் செல்வதிலும், சாதனையின் எல்லையை மேலும் விஸ்தரிப்பதிலும் நமக்கு கிடைக்கும் ஆனந்தம் இருக்கிறதே, அதற்கு ஈடு இணையான வேறு வகை ஆனந்தமும் உண்டோ? இன்பத்தில் நாட்டம் கொண்டோர், கணநேரம் சிந்தித்துப் பார்ப்பார்களாக! அவர்கள் அனுபவிக்கும் ஆனந்தங்கள் அவர்களின் காலடியில் கிடக்கும் புற்களைப் போன்றோ அல்லது காலை வேளையில் மலர்களின் மீது மினுமினுக்கும் பனித் திவலைகளைப் போன்றோ கணக்கிட முடியாதவை என்பதைக் காணலாம்.

முதன் முதலில் என் தன்னுணர்வின் ஒளிபட்ட காலத்தில், "அடேயப்பா! எவ்வளவு அற்புதமாயிருந்தது தெரியுமா! அழிந்துபோன என் இளமைப்பிராயம், அறிவுக் கடலில் ஊறித் திளைத்து, மீண்டும் துளிர்விட்டு வளரத் தொடங்கியது; குழந்தைப்பிராயம் மீண்டும் மலர்ந்து இன்பத்தை அளித்தது; உயிருடன் இருப்பது நல்லதே!'' என்று என் ஆத்மாவின் அடி ஆழத்தில் நான் கதறினேன், நடுங்கும் இரு கரங்களையும் நீட்டி வாழ்க்கையை அழைத்தேன். அன்று முதல் மௌனம் என்மீது செவிப் புலனின் மையைத் திணிக்க முயன்றது. நான் விழித்தெழுந்து பார்த்த உலகம் அப்பொழுதுகூட மர்மம் நிறைந்ததாகவே இருந்தது. ஆனல், அதில் நம்பிக்கையும் அன்பும் கடவுளும் இருந்ததால் எனக்கு வேறு எதைப்பற்றியும் கவலையேயில்லை. நாம் தேவலோகத்திற்குள் நுழையும்போதும் இந்த அனுபவம் ஏற்படுவது சாத்தியமல்லவா?

ஆசாபங்கத்திஞல் அதிருப்தியடைந்து, வழியில் இவ்வளவு பெரிய முட்டுக்கட்டைகள் ஏன்? என்று நம்மை நாமே கேட்டுக்கொள்கிருேம். செளகர்யமாக எவ்விதச் சிரமமுமின்றிக் கப்பலை ஒட்டிச் செல்வதற்குப் பதிலாக, பிரதிகூலக் காற்றையும் கொந்தளிக்கும் கடலையும் எப்பொழுதுமே எதிர்த்துப் போராட வேண்டுமா என்று நாம் ஆயாசப்படலாம். துன்ப மற்ற அமைதியான வாழ்வில் நற்குணங்களை வளர்க்க முடியாது என்பதே அதற்குக் காரணம். துயரத்தையும் இடுக்கண்களையும் அனுபவித்தால் மாத்திரமே ஆன்மா உறுதிபெறும்; திருஷ்டி தெளி வடையும்; ஆசை தூண்டப் பெறும்! வெற்றியும் கிட்டும்; மனித சமுதாயத்திற்கு ஆற்றிய தொண் டிற்காகச் சரித்திரத்தால் கெளரவிக்கப் பெறும் ஆண்களும், பெண்களும் பிரதிகூலத்தின் பயன்களை அறிந்தவர்களே. எதிர்ப்பையோ, கஷ்டங் களையோ கண்டு பயப்பட மறுத்ததிஞலேயே அவர்கள் வெற்றி பெற்றனர்; இந்த இடையூறுக ளெல்லாம் அவர்களிடம் மறைந்து கிடந்த சக்தி களையும் உறுதியையும் தட்டி எழுப்பின. இந்தச் சக்தியும், உறுதியும், அவர்கள் சாதாரணமாக விழையும் குறிக்கோள்களையும் பெற்று அதற்கப் பாலும்கூடச் செல்ல உதவின.

பயங்கரமான கொந்தளிப்புக்குள்ளான உலகத்தில் நிறைந்திருக்கும் குப்பை கூளங்கள் பல ஆண்டுகளுக்கு நம் வழியை மறிக்கும். எந்த ஒரு மனிதனையும் விட வன்மையுடையதாகவும், எல்லா மனிதர்களையும் நிதானப்படுத்தி ஊக்குவிக்கும் சக்தியுடையதாகவும் உள்ள ஒரு உயர்ந்த லட்சியத்தின் மூலமே அந்தக் குப்பை கூளங்களைத் தாண்டிச் செல்ல முடியும். அமைதியும், சிருஷ்டிப் பணியும், அழகுதர வாழும் ஆனந்தமயமான குழந்தைகளும், ஆண்களும், பெண்களும் கலந்தே புத்தியுள்ள ஒரு சமூகத்தின் செல்வங்களாகும். ஆனால் இத்தகைய சமுதாயம் தெய்வ சங்கற்பத்தால் ஏற்படக்கூடியதல்ல; அதை நாமே உருவாக்கவேண்டும். நமது தலைவிதியை எதிர்நோக்கும் பொறுப்பு நமதே; உறுதியின் நம்பிக்கையின்றி அதைச் செவ்வனே செய்ய முடியாது. நம்பிக்கை என்பது நடைமுறைக்கு உகந்ததல்ல; காற்றடிக்கும் போக்கிலேதான் நாம் செல்லவேண்டும் என்றெல்லாம் வெகு காலமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அசிரத்தையும் சமரசமும் குழப்பத்தையே உண்டாக்கும் எனும் உண்மை இப்பொழுது நம்மைத் துளைத்துக் கொண்டிருக்கிறது.

"கடவுளை நம்புகிறேன்; மனிதனை நம்புகிறேன்; ஆன்மாவின் சக்தியை நம்புகிறேன்; நம்மையும் பிறரையும் ஊக்குவிப்பது நம்முடைய புனிதமான கடமை என்று நம்புகிறேன்; கடவுளின் உலகத்தைப் பற்றித் துன்பம் நிறைந்த வார்த்தை எதையும் சொல்லாமல் நமது நாவைக் காப்பதும் நம்முடைய புனிதமான கடமையென்று நம்புகிறேன்; ஏனெனில், உத்தமமானதாகக் கடவுள் உண்டாக்கிய இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றி, ஆயிரக்கணக்கான மனிதர்கள் உத்தமமானதாகவே வைத்திருக்க முயன்ற இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றிக் குறைகூற யாருக்கும் உரிமை கிடையாது'' என்று, இளம் பெண்ணைக் கல்லூரியில் இருந்த காலத்தில் என்னுடைய கோட்பாட்டைப் பற்றி எழுதியிருந்தேன். இந்தச் சொற்களை எழுதி எத்தனையோ ஆண்டுகளாகி விட்டன. நானும் எண்ணற்ற நஷ்டங்களையடைந்துவிட்டேன்; சொல்லொணுத் துயரங்களுக்கும் ஆளாகிவிட்டேன். ஆயினும்கூட என் கோட்பாட்டை மாற்றிக் கொள்ள உரிய காரணம் எதுவும் எனக்குத் தோன்றவில்லை. கடவுளிடத்திலும், மனிதனிடத்திலும் ஆன்மாவிலும் நம்பிக்கை வைக்கும் எந்த மனிதனும், அடிப்படையில் உத்தம நோக்குடைய

வன் என்றே நான் கருதுகிறேன். எத்தகைய துன்பம் அவனுக்கு நேரிடினும், நன்மையே பிரபஞ்சத்தை ஆதிக்கம் செலுத்தும் சக்தி என்பதை அவன் அறிவான். அந்த நன்மையும், கடவுளின் அன்பும் தன்னைச் சூழ்ந்திருப்பதை அவன் உணருவான்.

வி திவசத்தால் கண வனையும், தாய்மையின் பேரானந்தத்தையும் அடையும் பாக்கியம் இல்லாத என் போன்றவருக்கு இந்த உலகில் எத்தகைய ஆறுதலிருக்க முடியும்? என்னுடைய தனிமை எப்பொழுதுமே அளவிடற் கரியதோர் சூனியமாக இருக்குமென்றே இந்தச் சமயத்தில் தோன்றுகிறது. ஆனுல் அதிர்ஷ்டவச மாகப் பெரிய அளவிற்கு—முன்பிருந்ததைவிட மிக அதிகமாகவே—பணியாற்றும் வாய்ப்பு எனக்குள் ளது. இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் காலத்தில் என்றுமே கண்கள் மங்காத, காதுகள் மந்தமடை யாத ஒரு உலகில், பூர்த்தி பெருத என் ஆசைகள், களிகொள்ளத்தகும் வகையில் பூர்த்தி அடையும் என்ற உறுதிப்பாட்டுடன் நான் எப்பொழுதும் வாழ்கிறேன்.

நம்முடைய துயரத்தை மிகைப்படுத்தி எண்ணி உழலும்போது அநாவசியமான கஷ்டத்தை நாமே வரவழைத்துக் கொள்ளுகிறோம். துன்பத்தின் மூலம் தூய்மையடைவதென்பது மாந்தர் யாவருக்கும் பொதுவிதியாக விருக்கும் பொழுது, நாம் மட்டும் ஏன் அதற்கு விதிவிலக்கு கோரவேண்டும்? பெரிய அதிர்ஷ்டசாலிகளுடன் நம்மை நாம் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு பதிலாக, மிகப் பெரும்பான்மையாக இருக்கும் நம்முடைய சகநிலையில் இருப்பவர்களுடன் நம்முடைய நிலைமையை நாம் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வோமானால், மற்றவர்களைவிட நாமே பாக்கியசாலிகளாக இருக்கிறோம் என்பது தெளிவாகிவிடும்.

சுயநலமும்; குறை கூறும் குணமும், மனத்தை மயக்கி நெறி தவறச் செய்வதே போன்று, ஆனந்தமயமான அன்பு நமது திருஷ்டியைத் தெளிவாக்கிக் கூர்மை பெறச் செய்கின்றது. முன்பு மங்கலாகவும் அற்பமானதாகவும் தோன்றிய விஷயங்களிலேயே அதி அற்புதங்களைக் காணும் நுண்ணிய புலனறிவை அன்பு நமக்களிக்கிறது. ஆவேச உணர்ச்சியின் ஊற்றுக்கண்களை அது புதுப்பிக்கின்றது: அதனுடைய ஆனந்தம், சடப்பொருளால் தடையுற்றிருக்கும் திறமைகளுக்கிடையே உயிருள்ள புதிய உதிர வெள்ளத்தைப் பாய்ச்சுகிறது.

நம்பிக்கையுடன்

இணைக்கப்பெருத சுதந்திரம் பாதி உயிரை இழந்தது போலாகும். அரசாங்கத்தின் அமைப்பை உருவாக்குவதில் தங்களுக்குத் திட்டவட்டமானதோர் பங்கு இருக்கவேண்டும் என்று கோருவதற்கு உரிய நம்பிக்கை பெரும்பாலான அமெரிக்கர்களுக்குக் கிடையாது. தங்களின் நலன்களை உண்மையிலேயே பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய உயர்ந்த அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுக்கும் சிரமத்தை அவர்கள் அநேகமாக மேற்கொள்வதில்லை. தங்கள் கடமைகளை நிறைவேற்ருமல் தப்பித்துக் கொள்கின்றனர். நேச பூர்வமான ஒற்றுமைச் சக்தியாகிய நம்பிக்கை, சமூக முழுவதிலும் பரவி இருப்பதற்கு மாருக, பிரசாரகர்கள், கனவு உலகில் திரிபவர்கள் கையாலாகாதவர்கள் ஆகியோரிடம் ஒப்புவிக்கப் பட்டுள்ளது.

மக்களின் துயரங்களையும் சுமைகளையும் அறிந்ததன் மூலமாக, இருளின் வலிமையையும் மீறித் தப்பிப் பிழைத்திருக்கும் ஜீவத்திறலைப் பற்றி என்றும் இல்லாத அளவில் எனக்குத் தெரியும். இந்தச் சக்தி பூரணமாக ஜெயக்கொடி நாட்டாவிடினும், தொடர்ந்து வெற்றிபெற்று வருகிறது. அழிவுச் சக்திகளுக்கெதிரான போராட்டத்தை நாமும் தொடர்ந்து நடத்துகிறோம். மொத்தத்தில் போராட்டம் மனித சமுதாயத்திற்கு ஆதரவாகவே நடக்கிறது. கடவுளின் அதிஅற்புதப்பணியை நிறைவேற்றுவதற்குரிய தகுதி உலகின் மிகப் பெரிய இதயத்திற்கு உண்டு என்பதும் தெளிவாகிறது. நிராகரிக்கப்பட்டாலும் முயற்சியைக் கைவிடாமல் ஆன்ம நிந்தை ஏற்படினும் மீண்டும் மீண்டும் நம்பிக்கை கொண்டு, சிறிதும் அஞ்சாது, உறுதியுடன் அளவிட முடியாத தூரத்திலுள்ள இலட்சியங்களை மனித இதயம் நாடுகின்றது. வெளிக் கஷ்டங்களாலோ, தன்னுள்ளே பல்லாண்டுகளாக இருந்துவரும் வேதனையாலோ மனச் சோர்வடையாமல், ''மனந் தளராதே, மோட்ச ராஜ்யம் எதிரில்தான் இருக்கிறது'' என்று இரகசியமாகக் கூறும் குரலுக்கு இதயம் செவிசாய்க்கிறது.

சமயப் பாதைக்குத் திரும்புங்கள் என்று எல்லாப் பக்கங்களிலிருந்தும் அறைகூவல் விடுக்கப்படுவதை நாம் கேட்கிறோம். இந்த அறைகூவலிலே ஊக்கமூட்டும் அளவிற்கு உண்மை ஒலிக்கின்றது. ஆனால் சமயம் என்பதற்கு நாம் நம்பிக்கையெனும் பாதையில் திரும்புதல் என்று பொருள் கொள்ளும்போது, சமயப் பாதைக்குத் திரும்புங்கள் என்று சொல்லுவது ஓரளவு குழப்பத்தைத் தரவில்லையா? நம்பிக்கையின் பயனே சமயம். எனவே நம்பிக்கையில்லாத சமயம் வேண்டும் என்று கூறுவது, விதையில்லாமலே மலர் வேண்டுமென்று கூறுவதற்கு ஒப்பாகும்.

உடைய எனது நண்பர்களிடம் தினந்தோறும் அசையாத நம்பிக்கை வைக்கிறேன். எப்படி அவர்களுடைய புலன் உணர்ச்சிகள் அவர்களை ஏமாற்றித் தவருன வழியில் இட்டுச் செல்கின்றன என்று அவர்கள் கூறுகிருர்கள். ஆயினும் அவர்கள் கூறியதிலிருந்து விலைமதிக்கமுடியாத எண்ணற்ற உண்மைகளை நான் அறிந்துள்ளேன். இவற்றைக் கொண்டே என்னுடைய உலகத்தை நிர்மாணிக்கிறேன். வானத்தின் எழிலை மனத்தில் பாவிக்கவும், பறவைகளின் பாடல்களைச் செவிகளால் கேட்கவும் அவை என் ஆன்மாவிற்கு உதவிபுரிகின்றன. என்னைச் சுற்றிலும் மௌனமும் இருளுமே நிறைந்திருக்கலாம். ஆயினும் என்னுள்ளே, என் ஆத்மாவிற்குள்ளே, இசையும் ஒளியும் நிறைந்திருக்கின்றன. என் சிந்தனையில் எல்லா வர்ண ஜாலங்களும் தோன்றித்தோன்றி மறைகின்றன.

மிகச் சிறந்தது, மிக உன்னதமானது, மிக மிகப் பெரியது, மனித மனத்தால் இயற்கையின் சக்திகளை வசப்படுத்துவது, தேகபலத்தை ஆன்மிக வலிமைக்கு ஆளாக்குவது—யாவும் உலகத்தில் கரங்கள் செய்யும் வேலையே. இன்னும் இவ்வேலையின் உச்சமான வெற்றியை நாம் அடைந்துவிடவில்லை. இச்சக்தி இன்னும் ஒழுங்காக வரையறுக்கப்படவுமில்லை. உலகத்தின் அங்கங்கள் யாவும் உயிர்ப்பிக்கப்பட வேண்டும். அவைகளுள் ஒன்றும் துயரமுறுமல் ஒன்றுக் கொன்று முரண்படாமல் அறிவுக்குப் பொருந்த முழுமை உணர்ச்சியோடு ஒன்றேடொன்று ஒற்றுமையுற வேண்டும். அப்போது தான் கரம், மனிதனது ஜீவத்திறல், உலகைச் சமைக்கும் உறுப்பு, வெறும் யந்திரமாகக் கருதப்படாமல் யந்திரங்களைத் தடையற்று அடக்கியாளும் ஆண்மைபெறும். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும். வலிய கரத்துக்கு எதிராக எளிய கரத்தை அகற்றவேண்டிய அவசியம் இல்லை. அப்பொழுது உலகின் கரம் இப்பொழுது தெளிவற்ற வகையிலே எதைக் குறிக்கின்றதோ அதை, அதாவது மனித இனத்தைச் சீர்திருத்தி உயர்த்தி மிக மிக உயர்ந்ததை, சிருஷ்டி உச்சத்தைச் சாதிக்கமுடியும்.

வாழ்க்கை என்னைக் கொடுமையாக நடத்திவிட்டது என்று சொல்லப் படுகிறது. மனிதன் அனுபவிக்கின்ற பல இன்பங் கள் எனக்குக் கிடைக்காமல் இருப்பதால் நான்கூட சில சமயங்களில் என் மனதிற்குள் முணுமுணுத்துக் கொள்வதுண்டு. ஆனால் என்மீது வாரிச் சொரி யப்பெறும் நட்பு என்னும் செல்வத்தை எண்ணிப் பார்க்கும்பொழுது, வாழ்க்கைக்கு எதிராக நான் சுமத்திய குற்றச்சாட்டுகளை எல்லாம் தள்ளி விடு கிறேன். பல விஷயங்கள் எனக்கு மறுக்கப்பட் டிருக்கின்றன என்றால், வேறு பல விஷயங்கள் எனக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. என் அன்பு கெழுமிய நண்பர்கள் சிலரின் நினைவு என் மனத்தை விட்டு அகலாது இருக்கும்வரை, வாழ்க்கை சிறந் தது என்றே கூறுவேன்.

என்னுடைய ஆழ்ந்த நம்பிக்கையை எதுவுமே குலைக்கமுடியாது. சிரேஷ்டமானது என்று நாம் வழிபடும் சமயம், விதி, பரமான்மா, இயற்கை, கடவுள் ஆகியவற்றின்—கருணைகடாட்சத்தை நான் காண்கிறேன். எல்லாப் பொருட்களையும் வளரச்செய்து, வாழ்க்கையை இயக்குவிக்கும் சக்தி சூரியனில் இருப்பதை நான் அறிகிறேன். வரையறுத்துக் கூறமுடியாத இந்தச் சக்தியை என் நண்பனுக்கிக் கொண்டுள்ளேன். அதன் காரணமாக மகிழ்ச்சிபெற்று பகவான் எனக்கு என்ன கட்டளையிடுகிருரோ அதை ஏற்கத் தைரியத்துடன் தயாராக இருக்கிறேன். இதுதான் எனது உத்தம நோக்குடைய சமயமாகும்.

யாரையும் போலவே அநாவசியமான வறுமையையும், சீர்கேட்டுக்குள்ளாக்கும் சக்திகளையும் எதிர்த்துப் போராடுகிறேன். ஆனால் அதே சமயத்தில், இன்றுள்ள நிலைமையில் நாம் வெற்றியடையாவிடில் வேறு எந்த நிலைமையிலும் நாம் வெற்றி அடையமுடியாது என்று மனித அனுபவம் நமக்குப் போதிக்கிறது. அல்லி மலரைப்போன்று, அருவருக்கத்தக்க சூழ்நிலையிலும், தூய்மையுடனும், வன்மையுடனும் திகழாவிடில் எந்த ஒரு சூழ்நிலையிலுமே தார்மிகப் பலவீன முடையவர்களாகத்தான் இருப்போம். நாம் இருக்கும் உலகத்தை நம்மால் சமாளிக்க முடியாவிடில், வேறு எந்த உலகத்திலும் நாம் ஒன்றும் செய்ய இயலாது. நாம் எந்தச் சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதல்ல முக்கியமான பிரச்னை. மாறாக, ஒவ்வொரு நாளும் எத்தகைய சிந்தனைகளில் ஈடுபடுகிறோம், நாம் பின்பற்றும் இலட்சியங்கள் எவை என்பதே முக்கியமான பிரச்னை. சுருங்கச் சொன்னால் எத்தகைய மனிதர்களாக நாம் உண்மையில் இருக்கிறோம் என்பதே முக்கிய பிரச்னை. ''உன்னை நீ அறிந்தால் அதுவே உன் உலகம்'' என்ற அரேபியப் பழமொழி எவ்வளவு அற்புதமான உண்மை!

இயற்கையின் அற்புதங்களைவிட ஆன்மாவின் சக்திகள் மிக மிக ஆச்சரியமானவை. மற்ருெரு உலகத்தைப்பற்றி ஊனத்தனமான எண்ணங்களையோ சம்பிரதாயச் சொற்ருெடர்களையோ வெளியிடுவதற்குப் பதிலாக, கற்பனைச் சிறகுகள் கட்டி நாம் முன்பின் அறியாத பிரம்மாண்டமான பகுதிகளை அச்சமின்றி கடந்து ஆனந்தமும், மனிதத்துவமும் ஆனுல் அதே சமயத்தில் தெய்வகடாட்சம் நிலவுகின்ற சொர்க்கலோகத்திற்கு ஏன் பறக்கக்கூடாது?

என் தேசத்தை நான் நேசிக்கிறேன். இப்படிச் சொல்வது, என் குடும்பத்தை நான் நேசிக்கிறேன் என்று சொல்வது போலாகும். எப்படி என் பெற்றோர்களை நான் தேர்ந்தெடுக்கவில்லையோ அதுவேபோல் என் தேசத்தையும் நான் தேர்ந்தெடுக்கவில்லை. ஆனல் எப்படி தென் பிராந்தியத்தைச் சேர்ந்த என் தாய் தந்தையருக்கு நான் குழந்தையோ அதுவே போல் நான் என் தேசத்தின் புத்திரியும் ஆவேன். இன்று நான் இருக்கும் நிலைமைக்கு என் தேசமே காரணமாகும். நான் கல்வி பெறுவதை சாத்திய மாக்கிய உணர்வை வளர்த்ததும் அதுவே. என் போன்ற செவிடும், குருடுமான ஒரு குழந்தையை சிரத்தையோடும், திறமையோடும் வசதிகளோடும் அமெரிக்காவில் கவனித்ததைப்போன்று, கிரேக்க தேசத்திலோ, ரோம ராஜ்யத்திலோ, அல்லது சீன தேசம் முழுவதிலுமோ, ஜெர்மனியிலோ, இங்கிலாந்திலோ கவனித்தது கிடையாது.

அமெரிக்காவின்பால் எனக்குள்ள அன்பு குருட்டுத் தனமானதல்ல. அதை ஆழ்ந்து நேசிப்பதன் காரணமாக அதனுடைய குறைகளை நான் அதிகமாக உணர்வதும் சாத்தியமே. அதே சமயத்தில் என் குறைகளை நான் மறந்துவிடவுமில்லை. பழைய சூத்திரங்களால் நன்மை ஒன்றும் இல்லை

என்பதைக் காண்பதுவும் சுலபமே; புதிய சூத்திரங்களை வகுக்கவேண்டியது அவசியமாகும். ஆனால் இவற்றைத் தீர்மானித்த பிறகுங்கூட, மாறிக் கொண்டே வரும் உலகில் ஒரு நிதானமான பாதையை வகுத்துச் செல்வது சுலபமல்ல.

விரிவும் ஆழமும் பெற்ற பின்னர், வரையறுத்துக் கூறவொண்ணுத பிள்ளைப் பிராயத்துக் கவிதா உணர்ச்சிகள் யாவும் திட்டமான எண்ணங்களாக உருப்பெறத் தொடங்கின. அதாவது நான் ஸ்பரிசித்துப் பார்க்கக்கூடிய உலகம் என்னை அணைத்தது; நானும் அங்கு நீக்கமற நிறைந்திருந்தேன். நம்முடைய உணர்ச்சிகளையும் கருத்துகளையும் தவிர்த்து நமக்கு வேறு ஒன்றும் தெரியாது என்று பறைசாற்றும் தத்துவ ஞானிகளின் கூற்றை நான் நம்பத் தயாராயிருக்கிறேன். ஓரளவு விவேகத்துடன் பகுத்துப் பார்த்தால், பௌதிக உலகம் நிரந்தரமான மனவெழுச்சிகளின் பிரதிமையைக் காட்டும் ஒரு கண்ணுடியாகத் தெரியும். எப்படிப் பார்ப்பினும் சுய அறிவு என்பது நமது உணர்வின் நிபந்தனையும், எல்லையும் ஆகும். ஒருவேளை அதனுல்தான் பலர் தங்களுடைய குறுகிய அநுபவத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்களை அவ்வளவாக அறிந்திருப்பதில்லைபோலும். அவர்கள் தங்களுக்குள்ளேயே பார்க்கிறுர்கள். அங்கு ஒன்றையும் அவர்கள் காண்பதில்லை! எனவே, தங்களுக்கு வெளியிலும் ஒன்றும் இல்லையென்று அவர்கள் முடிவு கட்டிவிடுகிறுர்கள்.

# அன்றாடத் தேர்வுகளை

அற்பமானவை என்று எண்ணும்போது நாம் நம்முடைய சிறுமையைக் காட்டிக் கொள்ளுகிறோம். ஒவ்வொரு சாதாரணச் செயலையோ, பாடத்தையோ அல்லது அபிநயத்தையோ உயிருள்ளதாகச் செய்ய நாடகப் பண்பும் துணிவும் அவசியம். துயரங்களைக் குணப்படுத்தி முன்னேற்றத்தைக் காட்டும் மேதாவிலாசம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணியும் உஸ்வாச நிஸ்வாசங்களைப்போல் இவ்வற்பங்களின் உண்மை இயல்பை வடித்து எடுத்த சாரமேயாகும். நாம் சாதாரணமாகச் செய்யாத ஒரு பணியில் முழுமூச்சுடன் ஈடுபடுவோமேயானால் குருட்டுத்தனமாய் ஒரு வட்டத்திற்குள்ளேயே சுற்றிச் சுற்றிவரும் களைப்படைந்த குதிரையைப் போன்று இல்லாமல் விரைவிலேயே நமது மேதாவிலாசம் எந்த சோதனைக்கும் தயாராகிவிடும். திடசங்கற்பத்திற்கும், தன்னிச்சையான பேச்சிற்கும் நம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வது உப்பு நீரில் குதிப்பது போலாகும். அதன் பலன்கள் உடனடியாகத் தெரியாமல் இருக்கலாம்; ஆனால், இனிமையான உப்புக் கரிக்கும் சிறப்பு மிக்க அந்த நீர் நம்முடைய நரம்புகளில் ஊறி வரப்போகும் வெற்றிக்குத் தயார்ப்படுத்தும்.

'கேவலமான அன்பில்லாத நிகழ்காலத்தைப் பார்க்காமல் அழகிய கனவுலகில் வாழ்வதால் நான் பெரிதும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும்' என்று ஒரு கவிஞர் என்னிடம் சொன்னார். நான் அழகிய கனவுலகில் வாழ்வது உண்மையே ; ஆனால் அந்தக் கனவு உண்மையானது, நிகழ் காலத்தைச் சேர்ந்தது, – அன்பற்றதல்ல. கனிவு நிறைந்தது, கேவலமானதல்ல, ஓராயிரம் ஆசிகளைப் பெற்றது ; மிகக் குரூரமான முறையிலே பிரமைகளை அகற்றும் கேடு என்று கவிஞர் எதை நினைத்தாரோ, அது ஆனந்தத்தைப் பற்றிய பரிபூரண அறிவைப் பெறுவதற்கு அவசியமாகும். கெட்டவைகளுடன் தொடர்புகொண்டதனால்தான், உண்மை, அன்பு, நன்மை ஆகியவற்றின் அழகை என்னால் ஒப்பிட்டுப் பார்க்க முடிந்தது.

உலகில் ஆனந்தம் என்பது மிக முக்கியமான ஒரு சக்தி எனப் பார்க்காதவன் வாழ்க்கையின் சாரத்தையே இழந்து விடுகின்றான். ஆனந்தம் என்பது மாற்றங்களுக்கு ஒற்றுமையும் முக்கியத்துவமும் அளிக்கக்கூடிய ஒரு ஆன்மிக சக்தியாகும். நல்லதே வெற்றி பெறும் என்பதில் நம்பிக்கை கொள்வது ஒரு இனத்திற்குப் புத்துயிர் அளிக்கும். விவேகம் உள்ள உத்தம நோக்கு ஒரு மனிதனுக்கு நல்லதோர் குறிக்கோளைத் தரும். அவன் சிந்தனைக்குத் தடையாக நிற்கும் பீதிகளை அகற்றிவிடும். அதமநோக்கு அல்லது நடப்பது நடந்தே தீரும் என்று வாளாவிருத்தல் ஆன்மாவைப் பலவீனப்படுத்திச் சமுதாயத்தைப் படுநாசக் குழியில் தள்ளும். ஆனால் சங்கற்பத்தோடு கூடிய பொறுமை ஒரு பெரிய சக்தியாகும். முதலில் கூறியது வருத்தத்தைத் தரத்தக்கது; பிந்தியதோ நமக்கு ஒரு சொத்தாகும்; ஏனெனில் அது ஒரு நம்பிக்கை, உந்தித்தள்ளும் சக்தி உத்தம நோக்கு என்பது ஜெஹோவாவின் மின்னலைப்போன்று எல்லாம் விதிவசம் என்று கூறி வாளாவிருக்கும் தன்மையை அகற்றிவிடும்.

சில சமயங்களில், மூடப் பெற்றுள்ள வாழ்க்கைக் கதவருகில் தன்னந்தனியாகக் காத்திருக்கும் தனிமை உணர்ச்சி பனிப்படலம் போன்று என்னைச் சுற்றி வளைத்துக் கொள்வதென்னவோ உண்மைதான். அப்பால் கொஞ்ச தூரத்தில் வெளிச்சமும் இசையும் இனிமையான தோழமையுமிருக்கும்; ஆனால் அங்கு நான் காலடி எடுத்து வைக்க இயலாது. கருணையற்ற, மௌனமான விதி வழியைத் தடுத்து நிற்கிறது. இதைப்பற்றி தர்க்கிக்க எனக்கு ஆசைதான். இதற்குக் காரணம், என் இதயம் இன்னும் கட்டுப்படாதிருந்ததே. ஆயினும் என் உதடுகள் வரைக்கும் வந்து விடும் பயனற்ற கடுஞ் சொற்களை என் நா வெளியிடுவதில்லை. சிந்தாத கண்ணீரைப் போல் அவை மீண்டும் என் இதயத்திற்குள்ளேயே விழுந்து விடும்; மௌனம் பிரம்மாண்டமானதாக என் ஆன்மா மீது அமர்ந்திருக்கிறது. பின்னர் முறுவலுடன் கூடிய நம்பிக்கை தோன்றி, ''தன்னையே மறந்திருப்பதில் ஒரு தனி இன்பமுண்டு'' என்று முணுமுணுக்கிறது. உடனே பிறரின் கண்களில் வீசும் ஒளியை எனது சூரியனாகவும் பிறரின் செவிகளில் பாயும் இசையை எனது கீர்த்தனையாகவும், ஏனையோரின் உதடுகளில் தவழும் புன்னகையை எனது இன்பமாகவும் கொள்ள நான் முயலுகின்றேன்.

நமக்கு ஏராளமான சந்தேகங்கள் தோன்றுகின்றன; அதற்காக நாம் மனச் சோர்வடைய வேண்டியதில்லை. சுத்தமான கேள்விகள் நம்பிக்கையை வலிவும் வன்மையுமுடையதாக வைத்திருக்கும். ஐயப்பாடுடன் தொடங்கினாலன்றி, ஆழ்ந்த நம்பிக்கை கொள்வது என்பது சாத்தியமல்ல. சிந்திக்காமல், மேலெழுந்தவாரியான, நம்பிக்கை கொள்பவனின் நம்பிக்கையால் பிரயோசனமில்லை. அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருப்பவன், இரத்தமும், கண்ணீரும் சிந்தி அந்நம்பிக்கையைப் பெற்றிருக்கிறான். முள்ளும் புதரும் நிறைந்த காட்டைக் கடந்து நல்ல பாதையை அடைபவனைப் போன்று, சந்தேகத்திலிருந்து உண்மையை அறிய முயன்றவன் அவன்.

ஒரு தலைமுறையை ஊக்குவிக்கும் நம்பிக்கைகள், அடுத்த தலை முறைக்குப் பயனற்றதாவதை நான் மறக்கவில்லை. ஆவேசம் குன்றியதும் தெய்வத்துடன் இணையும் இயல்பான ஆனந்தத்தை இழந்து விடுகிறோம். வாழ்க்கையையும் நடத்தையையும் பற்றிய கருத் துக்கள் பரிசீலனையின்றி ஏற்கப் படுகின்றன. சட்ட திட்டங்கள், சடங்குகள், ஜாதிகள் இவை உண்மைச் சமயத்தை மறைக்கின்றன. வேத வாக் கியங்களின் கனம் நம்பிக்கையின் கழுத்தை முறிக் கின்றது. "மந்தச் செவியுடைய வைதிகம் கல்லைக் கனிந்த சிறகாக்கும் கவிதைகளின் கீதத்தை அழித்துவிடுகிறது. உயிரூட்டும் உணர்வை மீண்டும் தூண்டி விடும்பொருட்டு கலகம் தேவைப்படு கிறது. ஆனால் இத்தகைய எழுச்சியும் வீழ்ச்சியும், நம்பிக்கையும் சுதந்திரமும் அடிமைப்படுத்த முடியாதவை என்பதை எடுத்துக் காட்டுகின்றன. எல்லாக் காலங்களிலும் நம்பிக்கையே சிருஷ்டி அற்புதங்களைக் காணும்படி மனிதனைத் தூண்டி யுள்ளது. அவனுள்ளும் வெளியிலும் செயல் புரியும் சக்தியை புது நோக்கங்களை அடையும் வண்ணம் நம்பிக்கை ஊக்குவிக்கிறது.

உன் குறைகளை நேர் முகமாய் நின்று ஒப்புக்கொள்; ஆனால் அவற்றிற்கு அடிமையாகி விடாதே; அவை உனக்குப் பொறுமையையும், கனிவையும், தீர்க்க தரிசனத்தையும் போதிக்கட்டும். அறிவு, அழகு, நல்லொழுக்கம் இவைகளின் ஒற்றுமையே கல்வி; இம் மூன்றிலும் மிகச் சிறந்தது நல்லொழுக்கமே. நம்மால் இயன்ற அளவு நல்லொழுக்கத்தில் நின்றால் நம் வாழ்விலும், பிறர் வாழ்விலும் நமக்குத் தெரியாமலேயே பல அற்புதங்கள் நிகழும்.

**ஒள**னுடம்போடு

உயிர்க்கும்போது உதவியற்றவர்களாய்ப் பிறக்கிறோம்; பிறர் கையை எதிர்பார்க்கிறோம்; எனினும் ஆன்மிகத் துறையில் நாம் சுறுசுறுப்பானவர்கள்; ஒரு வகையில் சிருஷ்டி கர்த்தாக்களுங்கூட. நம் பிறப்பின் மேல் நமக்கு அதிகாரமில்லை. ஏனெனில், பிறந்த பிறகே நம்மை நாமே ஆக்கிக்கொண்டாலும் சரி, அழித்துக் கொண்டாலும் சரி, நம் வாழ்க்கை துவங்குகிறது. இதற்கு மாறாக நம்முடைய வாழ்க்கையில் எத்தகைய பிறவியாக வாழப் போகிறோம் என்பது நம்மைப் பொறுத்த விஷயமே. அதில் நமக்கு நேரடியான பங்குண்டு. நாம் விரும்பாமல் உண்மையான ஆன்மிக வாழ்க்கை எதையும் நம் மீது யாரும் திணிக்க முடியாது.

கடவுள் தம் திருவாக்கின் மூலம் நம்மை அழைக்கிறார். வாழ்வைத் தேர்ந்து என்னிடம் வாருங்கள். வாழ்வை அழிக்கும் புன்மைகளுக்கு எதிராக எப்பொழுதும் விழிப்புடன் இருங்கள். நம் சிந்தனை சகதியைச் செலுத்தி, நம் இதயங்களை எப்பொழுதுமே கனிவும் தூய்மையும் நிறைந்தவையாக வைத்திருப்பதன் மூலமே நாம் உண்மையில் உயிர் பெறுகிறோம். ஆனால் எழில் நிறைந்த இந்த மறு சிருஷ்டிப் பணியை அநுஷ்டானத்தின்

மூலம் நிறைவேற்ற முடியாது. ஆன்மாவின் அமைதியான அடி ஆழத்தில் அப்பணி நிறைவேறுகிறது. கர்த்தர் சொல்லியது போல், ''காற்று தன்னிச்சையாய் வீசுகிறது, நீ அதன் குரலைக் கேட்கிறாய். அது எங்கிருந்து வருகிறது, எங்கு செல்லுகிறது என்று தெரியாது. இதைப் போன்றே ஆன்மிகப் புனர் ஜனனமும்.''

ஒரு கெட்ட கனவிலிருந்து விழித்தவுடன் உன் அன்பிற்குரிய ஒருவரின் வதனம் உன்னை நோக்கிப் புன்னகைபுரிவதைவிட இன்பமானது வேறு என்ன? பூமியிலிருந்து மோட்சத்தை நோக்கி விழித்துப் பார்த்தால் இப்படித்தானிருக்குமென்று நம்பவே நான் ஆசைப்படுகிறேன். நான் 'இழந்து'விட்ட என் அருமை நண்பர் ஒவ்வொருவரும் இவ்வுலகத்திற்கும், உதயத்திற்கு அப்பால் உள்ள இன்ப உலகத்திற்கும் இடையே ஒரு தொடர்பு என்றே நான் கருதுகிறேன். இந்த என் நம்பிக்கைத் தளர்வதே இல்லை. அந்த நண்பர்களின் கனிவு நிறைந்த வார்த்தையைக் கேட்காமல் இருக்கும்போதோ, அல்லது அவர்களின் கரங்களின் ஸ்பரிசத்தை உணராமல் இருக்கும்பொழுதோ க்ஷணநேரத்திற்கு என் ஆன்மா சோகக்கடலில் மூழ்கித் திளைப்பதுண்டு. ஆனால் நம்பிக்கையின் ஒளி என் வானத்திலிருந்து மறைவதேயில்லை; எனவே நான் ஆறுதல் பெற்று, அவர்கள் சுதந்திரம் அடைந்து விட்டதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். யாரும் சாவைக் கண்டு எதற்காக அஞ்சவேண்டும் என்பதே எனக்குப் புரிவதில்லை. சாவைவிட இங்குள்ள வாழ்க்கை மிகவும் கொடுமை நிறைந்தது. வாழ்க்கை என்பது பிளவையும் பேதத்தையும் உண்டாக்கும்; ஆனால் சாவோ

உண்மையில் அதுதான் நித்யமான வாழ்வு. என் ஊனக் கண்களுக்குள் உள்ள ஞானக் கண்கள் வரப்போகின்ற உலகத்தில் திறந்ததும் என் இதய பூர்ணமான இன்ப நாட்டில் நான் வசிப்பேன். உச்சங் காண முயலும் ஊனக் கண்களுக்கப் பால் என் சிந்தனை எழுகிறது. இறந்து விட்ட என் அன்பிற்குரிய நண்பர்களில் கோடியில் ஒருவரே உயிருடன் இருக்கிறார் என்றாலும் தான் என்ன? எனக்கு இதுவே போதும், இதைப் பயன் படுத்திக்கொள்வேனே தவிர எந்தவித சந்தேகத் தாலும் என் நண்பர்களின் ஆன்மாக்களை வருந்தவிடமாட்டேன்; இது தவருக இருந்தால் பின்னர் அறிந்துகொள்வேன். நித்யத்வம் பெற ஒரே ஒரு சந்தர்ப்பமாவது இருப்பதால், மறைந்து விட்டவர்களின் இன்பத்திற்கு களங்கம் ஏற்படுத்த நான் முயல்வேனு? யாருக்கு உற்சாகம் அதிக மாகத் தேவை—உலகின் இருட்டில் தடுமாறுபவ ருக்கா? அல்லது, கடவுளின் ஒளியிற் காணுபவ ருக்கா? பார்க்காத ஒரு சூரியனைப்பற்றிப் பூமியின் நிழலில் இருந்தவாறே ஊகிப்பவர்க்கு இருள் எவ்வளவு உண்மையானது! ஆனுல் இந்த பூமியில் இருந்தபொழுது கடைசி நிமிடம்வரை நம்மை அன்புடன் நேசித்தார்களே, அவர்களு டன் ஆன்மிகப்பூர்வமான தொடர்பு கொள்ள

முயலுவது எவ்வளவு அற்புதமான காரியம்! உன்னதமான அன்பினுலோ, தூய ஆனந்தத்தாலோ நம் உள்ளம் நெகிழ்ச்சி அடையும் பொழுது இறந்தவர்களைப் பற்றி நாம் மிக்க கனிவுடன் நினைக்கிறேம்; கவர்ந்திழுக்கப் பெறுவதையும் உணர்கிறேம்—நிச்சயமாக இது நம்முடைய இன்பமயமான அனுபவங்களில் ஒன்ருகும். இத்தகைய நம்பிக்கையைப் பற்றிய உணர்வு மரணத்தின் தன்மையையே மாற்றக்கூடிய சக்தி வாய்ந்தது; பிரதிகூலமானவற்றை அனுகூலமாக்கக்கூடியது; தங்களிடமிருந்த துளி இன்பமும் போய்விட்டது என்று மனமுடைந்து இருப்பவர்க்கு உற்சாகமூட்டும் கலங்கரை விளக்காக திகழக்கூடியது. மோட்சம் என்பது எங்கோ இல்லை, நம்முள்ளேயே இருக்கிறது என்று நாம் உறுதியாக நம்பும் பொழுது, "மறு உலகம்" என்று ஒன்று இல்லை. மேலும் மேலும் பணியாற்றவும், அன்பு காட்டவும், அதி தீவிர நம்பிக்கை கொள்ளவும் நம்முள்ளே உள்ள மோட்சத்தின் அழகிய வண்ணங்களால் நம்மைச் சூழ்ந்திருக்கும் இருளை அலங்கரித்து முலாம் பூச நாம் முயலவேண்டும்.

“நெருக்கடி”

என்ற வார்த்தையைக் கேட்டதும் பீதி கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. அது ஒரு சோக மயமான முடிவாகத்தானிருக்கவேண்டும் என்ற நியதி கிடையாது. குறைந்த ஒளிக்கும் அதிகமான ஒளிக்குமிடையிலோ அல்லது பயனற்றுப்போன மதிப்பீடுகளுக்கும் முற்போக்கான நன்மைகளுக்கு மிடையிலோ தேர்ந்தெடுக்கப் படவேண்டிய ஒன்ருக அது இருக்கலாம். முடிவுகொள்ளும் துணிவு என்பது எப்போதுமே மனிதனின் ஏக போக உரிமையாயிருந்து வருகிறது. சாதாரண மாகத் தேர்ந்தெடுப்பவைகளும் நெருக்கடிகளே; எளிய சொற்களும்கூட முடிவானவையே. ஒவ் வொரு தடவையும் ஒருவரோடொருவர் சேர்ந்து உணவருந்தும்போது, நாம் கூர்ந்து நோக்குவோ மாயின், முந்திய தடவை உணவருந்திய காலத்தி லிருந்த மனித தத்துவத்தின் கவர்ச்சி அப்போது மிருப்பதைக் காணலாம். இங்குத்தானிருக்கிறது மரணமடைந்த ஒருவர் உயிருடன் இருந்த காலத் தில் பாராட்டவேண்டியதைப் பாராட்டாமலும் பிறருக்கு உதவி செய்யாமலுமிருந்ததற்காக ஏற் படும் சுய—நிந்தனையின் காரணம். ஒவ்வொரு நாளும் மிகச் சிறப்புடன் வாழப் போதுமான அளவு பேறு பெற்றுள்ள நாம், மிகத் தாழ்வான

சாமானிய விஷயங்களில், மிகக் குறுகிய அளவில் மாத்திரமுள்ள நம்முடைய ஆனந்தத்தை விரயம் செய்யமுடியாது. அடுத்தடுத்து வரும் மாறுபாடுகள் எண்ணற்றவையாகவும், சீர்குலைக்கக் கூடியவையாகவுமிருப்பதால், நமது உள்ளப் பாதுகாப்பைப் பற்றி அசிரத்தையாக இருக்கவோ அல்லது அவற்றை அசட்டை செய்யவோ நம்மால் முடியாது.

நம் இதயம் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும்பொழுது இருண்ட பெருங் காட்டின் நடுவில் வழி தவறிவிட்ட பிரயாணியைப் போன்று ஆன்மிக ரீதியில் நாமும் அலைந்து திரிகிறோம். பயம் நம்மை, பற்றிப் பிடித்துக் கொள்கிறது. திக்கு திசை தெரியாமல் அலைந்து, வழியைத் தேடும் முயற்சியில், மரங்கள், பாறைகள் முதலியவற்றின் மீது மோதிக் கொள்கிறோம். அப்படி அலையும் காலத்திலேகூட அங்கும் ஒரு பாதை இருக்கத்தான் செய்கிறது. அதுதான் நம்பிக்கை என்னும் பாதை; இடுக்கண்கள் எனும் சிக்கலிலிருந்து நம்மை விடுவித்து, நாம் தேடிக்கொண்டிருக்கும் ராஜபாட்டைக்கு நேராக இட்டுச் செல்லும் பாதை.

மனிதனின் கரம் ஆற்றியுள்ள அற்புதங்களை நினைக்கும் பொழுது நான் மகிழ்ச்சியடைகிறேன், பெருமிதம் கொள்கிறேன். நம்மை யெல்லாம் காத்துப் பரிபாலிக்கும் '**கரத்தின்**' பிரதிமையும் சின்னமுமே மனிதனது கரம் என்று தோன்றுகிறது. நாம் அதனுடைய சிருஷ்டிகள், அதனுடைய வெற்றிகள், மனித இனம் தோன்றிய காலம் முதல் அதனால் புதுப்பிக்கப் பெற்றவர்கள். நம்மை இரட்சிப்பதிலோ அல்லது கெடுப்பதிலோ நம் கரங்களுக்குள்ள சக்தியைப் போன்று இந்தப் பூமியில் திடுக்கிடவும் மயிர் சிலிர்க்கவும் செய்யும் சக்தி வேறெதுவும் இல்லை. மனிதன் செய்கின்றதெல்லாம் உயிர்ப்புள்ள கரத்தின் வெளிப்பாடுகளே; ஆக்கலும், அழித்தலும் அதன் தொழிலே. ஒழுங்கிற்கும் நாசத்திற்கும் அதுவே கருவியாகும். அது ஒரு கல்லை நகர்த்துகிறது; அவ்வளவுதான். உலகமே புதிதாகச் செப்பனிடப்படுகிறது. ஒரு மண் கட்டியை அது பெயர்க்கிறது; பழங்களிலும், மலர்களிலும் புதியதோர் எழில் வெளிப்படுகிறது. செழுமைக் கடல் பாலைவனமெங்கும் பாய்ந்தோடுகின்றது.

Pண்டைக்காலத் தத்துவம் கூறும் ஒருவாதம் இப்போதுங்கூட ஏற்கக் கூடியதே. பார்வையிலும் சரி, பார்வையின்மையிலும் சரி ஒரு பரிபூர்ணம் உண்டு; அது உண்மைக்கு உண்மையையும், ஒழுங்குக்கு ஒழுங்கையும், அழகுக்கு அழகையும், ஸ்பரிசத்திற்கு ஸ்பரிசத்தையும் கொடுக்கக் கூடியது. இந்த வாதம் ஏற்கப்பட்டால் அந்தப் பரிபூர்ணம் பூரணமற்றதல்ல, முழுமையற்றதல்ல, அரைகுறையானதல்ல என்பதும் ஏற்படும். அன்றியும், நமது புலனறிவுகளின் குறுகிய அனுபவங்களுக்கு அப்பால் சென்று, கண்ணுக்குப் புலனாகாதவற்றையும் அது ஒளிபெறச் செய்யும்; மௌனத்தை மழுங்கவைத்து இசையுள்ளவற்றை இசைபெறச் செய்யும். இவ்விதமாக, மானச ஒழுங்கும் அழகும் இசைவும் நிறைந்த ஓர் உலகில் நாம் வாழ்கிறோம். இந்தக் கருத்துக்களின் சாரமோ அல்லது முழுமையோ அவற்றின் எதிர்மறைகளை—கேடும் ஒழுங்கீனமும் பிணக்கும் நிறைந்தவற்றை—அகற்றிவிடக் கூடியவை. எனவே செவிப் புலனின்மையும், பார்வையின்மையும் அலௌகிகமான மனத்தில் இருப்பதில்லை; அழியக்கூடிய லௌகிகமான புலனுணர்ச்சிகளுடன் அவையும் அகற்றப் பெறுகின்றன. கண்ணுக்குப் புலனாகும் பொருட்களின் சங்கேதமான யதார்த்தம் என் மனக்கண்

முன்னே பிரகாசிக்கின்றது. நிதானமற்றவகையில் அடியெடுத்து வைத்து என் அறையில் நான் உலாவிக் கொண்டிருக்குங் காலத்தில், என் ஆன்மா கழுகு போல் இறக்கை கட்டிப்பறந்து வானமண்டலத்தை யடைந்து, நித்திய அழகுடைய உலகைக் குறை வற்ற திருஷ்டியுடன் நோக்குகிறது.

சுயவளர்ச்சியும், உண்மைச் சுதந்திரமும் பெறும் பொருட்டு நம்மை ஊக்குவிக்கும் சிட்சையின் ரூபங்களே எல்லா வகைத் தடைகளுமாகும். மிக உயர்ந்த நற்பேறு களை நம்முள்ளே மறைத்து வைத்திருக்கும் கல்லையும் சிக்கிமுக்கியையும் வெட்டி எறிவதற்காக நம்மிடம் கொடுக்கப் பெற்ற கருவிகளே அந்தத் தடைகள். அசிரத்தையெனும் மூட்டத்தை நம் கண்களி லிருந்து அவைகள் கிழித்தெறிந்துவிடும். அப் பொழுது மற்றவர்கள் சுமந்து செல்லும் பாரத்தை நாம் காண்கிறோம். உடனே பரிவு நிறைந்த இதயத்தின் ஆணைக்குக் கட்டுப்பட்டு அவர்களுக்கு உதவி செய்யத் தெரிந்து கொள்கிறோம்.

அசுப பாவனை நம் மனத்தை ஒரு தடவை பற்றி விட்டால் போதும்; வாழ்க்கையே தலைகீழாகப் புரண்டு விடும். அகந்தையும் மனப்புழுக்கமும் தானிருக்கும். அயர்விலும் அழிவிலும் தவிரத் தனிப்பட்டவரின் ஒழுங்கீனத்திற்கோ சமூகக் குழப்பத்திற்கோ மருந்து கிடையாது. "நாளையே நாம் இறந்துவிடக் கூடும்; எனவே உண்டு, குடித்து, உல்லாசமாயிருக்கலாம்" என்கிறான் அசுப பாவனையுடையோன். இத்தகைய மனிதனின் கருத்துப்படியே என் வாழ்வை நான் நோக்குவேனாகில், நான் நாசமடையவேண்டியதுதான். என் கண்களைக் கவராத ஒளியையும், காதுகளில் ரீங்காரம் செய்யாத இசையையும் நான் வீணிலே தேடித் திரியவேண்டியதுதான். இரவும் பகலும் வரம் கோரி, திருப்தி என்பதே இல்லாதிருக்கும்; பயங்கரமான தனிமையில் ஒதுங்கியிருந்து பீதிக்கும் ஏக்கத்திற்கும் இரையாக வேண்டும். ஆனந்தமாகப் பொழுதைக் கழிக்க வேண்டியது எனக்கும் பிறருக்கும் நான் செய்ய வேண்டிய கடமை எனக் கருதுவதால் எத்தகைய பௌதிக அழிவையும்விட மிகமோசமான துன்பத்திலிருந்து நான் தப்பித்துக் கொள்கிறேன்.

உலகின் பிரச்னைகளுக்கெல்லாம் முழுமையான பரிகாரம் எனக்குத் தெரியுமென்று நான் பசப்பவில்லை. ஆனால் உலகைச் சீர்திருத்தவேண்டும் என்ற தூய்மையான கடமை உணர்ச்சி என்னை ஆட்கொண்டுள்ளது. எனவே அறவே சம்பந்தமில்லாத காரியங்களிலும்கூட எனக்குப் பொறுப்பிருப்பதாகக் கருதுகிறேன். எனினும் நான் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்த விஷயங்களைப் பற்றியும் கூடப் பல சமயங்களில் மௌனம் சாதித்துள்ளேன்; என் கருத்துக்களுக்காகப் பிறர் குற்றஞ் சாட்டப் பெறலாம் என்ற அச்சமே அதற்குக் காரணம். மனித இயல்பை மாற்ற இயலாது என்று நான் நம்பத்தயாராயில்லை. அப்படி மாற்ற முடியாவிடினும், அதை பயன்தரத்தக்க பாதைகளில் திருப்பிவிட முடியுமென்று நான் திடமாக நம்புகிறேன். சொத்து அல்ல, வாழ்வே வாழ்வின் நோக்கம் என்று நான் நம்புகிறேன். நமது பொருளாதார அமைப்பின் தவிர்க்க முடியாத விளைவுதான் யுத்தம். ஒருவேளை என் கருத்துத் தவறாயிருப்பினும் கிளர்ச்சியால் உண்மை எதையும் இழந்து விடாது; மாறாக லாபம் தானடையும் என்றே நம்புகிறேன்.

நமது செயல்கள் எந்த அளவிற்கு தீர்மானமானவையாயும் அடுத்தடுத்தும் நிகழ்கின்றனவோ, அந்த அளவிற்குச் செயலாற்ற வேண்டுமென்ற உறுதியும் வீர்யம் பெறுகிறது; மூளையும் அதன் வேலைக்கேற்ற வளர்ச்சியைப் பெறுகிறது. பின்னர் அது நம் பிக்கையை உண்மையிலேயே நிறைவேற்றுகிறது. ஒரு தீர்மானமோ, அல்லது அற்புதமான உணர்ச்சியோ, எவ்வித விளைவுகளையும் ஏற்படுத்தாமல் சிதறிப்போக நாம் அனுமதித்தோமானுல், நல்ல ஒரு சந்தர்ப்பத்தை நாம் இழக்கிருேம் என்பது மட்டுமல்ல; எதிர்காலக் குறிக்கோள்கள் பூர்த்தியடைவதைத் தாமதப்படுத்தி, உணர்ச்சியின் கூர்மையை மழுங்கச் செய்கிறது. ஸ்தூலமற்றதற்காக நம்மிடம் நிரம்பத் துணிவிருக்கிறது. ஆனுல் ஸ்தூலமானதற்குத் தான் போதிய அளவு துணிவில்லை. ஏனெனில் அன்ருடம் நமது தைரியத்தின் துணுக்குகள் எல்லாம் வற்றிப்போக அனுமதித்து விடுகிருேம்.

மூன்று விஷயங்களுக்காக என் அன்றாட வாழ்வில் நான் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். **அவருடைய** சிருஷ்டிகளைப்பற்றிய அறிவை **அவர்** எனக்குக் கொடுத்துள்ளதற்காக என் நன்றி. என் இருளில் நம்பிக்கை என்னும் ஒளியை ஏற்றி வைத்ததற்காக **அவருக்கு** என் ஆழ்ந்த நன்றி. மற்றொரு வாழ்வு, ஒளியும் மலர்களும் தெய்விக கீதமும் நிறைந்து இன்பங் கொழிக்கும் வாழ்வு—எனக்காக காத்திருப்பதற்காக மிகமிக ஆழ்ந்த நன்றி.

பிரபஞ்சத்தின் முடி வற்ற அற்புதங்களை கிரகிக்கும் சக்தி எந்த அளவிற்கு நம்மிடமிருக்கிறதோ அந்த அளவிற்கே அவை நமக்கு காட்டப் பெறுகின்றன. நம்மால் எந்த அளவுக்குப் பார்க்க முடியும் என்பதையல்ல, நம்மால் எந்த அளவுக்கு உணர முடியும் என்பதைப் பொறுத்தே யிருக்கிறது நமது திருஷ்டியின் கூர்மை. வெறும் அறிவு மட்டும் அழகைச் சிருஷ்டித்து விடாது. தன்னிடம் அன்பு காட்டுபவர்க்கே இயற்கை தன்னுடைய நேர்த்தியான கீதங்களை இசைக்கிறுள். ஆராய்ச்சியில் தமக்குள்ள ஆவலைப் பூர்த்தி செய்வதற்காக, உண்மை விவரங்களைத் திரட்டுவதற்காக மட்டும் செல்பவர்களிடம் அவள் தனது இரகசியங்களை வெளியிடுவதில்லை. பல்வேறு வகையான அவளுடைய தோற்றத்தில் மகிமையும் மென்மையும் நிறைந்த உணர்ச்சிப் பிரவாகத்தின் உள்ளுறைகளைக் காண்பவரிடமே அந்த இரகசியங்களை வெளியிடுவாள்.

"தீமையினின்று விலகிச் செல், நன்மையையே செய்" என்பது பழைய போதனை—இதை விட யார்தான் அற்புதமாகச் சொல்ல முடியும்? தன்னுடைய ஆசைகளில் எவை தன் சொந்த நலன்களைச் சார்ந்தவை, எவை தன்னைச் சுற்றியிருப்போரின் நலன்களைச் சார்ந்தவை என்பதைத் தன்னுள்ளேயே யார் நினைத்துப் பார்க்கிறானோ, அவன் காணமுடியும். இதைச் சிலர் தம் அந்தராத்மாவின் துணை கொண்டே அறிந்து கொள்கின்றனர். ஆனால் பலருக்கு இந்த அந்தராத்மாவினால் அறியும் சக்தி இல்லை. ஆயினும் கூடப் பொறுமையோடு பரிசீலித்தால், அவர்களுடைய களங்கங்கள், குறைகள், துர்க்குணங்கள் ஆகியவை —அவற்றை எப்பெயரிட்டு அழைத்தாலும் சரி— அவர்களுக்குத் தெரிய வரும். சுதந்திரமும் இன்பமும் நிறைந்த வாழ்வுக்குத் தளைகளாகவுள்ள இவற்றை அகற்ற வேண்டியதன் காரணங்களையும், அதற்கான வழிகளையும் அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

யாரைச் சந்தித்ததும் அந்தச் சந்திப்பிலே அற்புதமான கவிதையைக் கேட்பது போன்று மெய்சிலிர்க்கிறதோ, யாருடைய கரங்களை குலுக்கும்போது, அந்த ஸ்பரிசத்தில் வாயால் வர்ணிக்கவொண்ணாத பரிவு பொங்கி வழிகிறதோ, யாருடைய இனிமையான செழுமை மிக்க இயல்புகள் ஆவலும் பொறுமையின்மையும் நிறைந்த நம் மனவெழுச்சிக்கு அற்புத அமைதியை அளிக்கின்றனவோ, அத்தகைய மனிதர்களைச் சந்தித்த நாட்கள் மறக்க முடியாத மகிமை பொருந்தியவையாகும். இச்சந்திப்பின் சாராம்சத்திலே ஒரு தெய்விகத்தன்மை இருக்கிறது. நம்மைப் பீடித்துள்ள தடுமாற்றங்களும் சுழற்சிகளும் கவலைகளும் சோகம் நிறைந்த கனவுகள் போன்று மறைந்து விடுகின்றன. நாம் விழித்தெழுந்து கடவுளுடைய உண்மை உலகின் எழிலையும் இசையையும் புதிய கண்களுடன் பார்க்கிறோம், புதிய காதுகளுடன் கேட்கிறோம். நம் அன்றாட வாழ்வை நிரப்பும் களிப்பற்ற அற்பத்தனங்கள் யாவும் பிரகாசமான வாய்ப்புகளாகத் திடீரென்று மலர்ந்து விடுகின்றன. சுருங்கச் சொன்னால், அத்தகைய நண்பர்கள் நமக்கருகில் இருக்கும்போது எல்லாம் நன்மையாகவே முடிகிறது. ஒருவேளை முன்பு அவர்களைப் பாராமலேயே இருந்திருக்கலாம். மீண்டும்

அவர்கள் நம் வாழ்வில் தோன்ருமலேயே போய் விடவும் கூடும்; ஆயினும் அமைதியும் கனிவும் நிறைந்த அவர்களுடைய இயல்புகளின் சக்தி, நம்முடைய அதிருப்தியின் மீது விடப்பெற்ற புனிதமான தீர்த்தமாகும். தொட்டாலே குணமாக்கும் அதன் சக்தியை, தன்னுடைய உப்பு நீரை புதுப்பிக்கும் மலே ஆற்றின் ஸ்பரிசத்தைக் கடல் உணருவதே போன்று, நாம் உணருகிரேம்.

எல்லா வகையானக் கலைகள், இயல்புகள், ஒரு சீர்பெற்ற மனித சிந்தனை ஆகியவற்றின்படி, ஒழுங்கு, விகிதம், உருவம் யாவும் அழகின் அத்தியாவசிய அம்சங்கள் என்பதை நாம் அறிவோம். ஒழுங்கு, விகிதம், உருவம் ஆகியவை யாவும் ஸ்பரிசித்துப் பார்க்கக் கூடியவையே. ஆனால் சௌந்தரிய விலாசமும், சந்தலயமும் புலன் அறிவை விட ஆழமானவை. அவை அன்பையும் நம்பிக்கையையும் போன்றவை. அவை ஒரு ஆன்மிகப் போக்கில்தான் தோன்றுபவை; மிகமிகக் குறுகிய அளவிலேயே அவை புலனறிவுகளைச் சார்ந்துள்ளன. மூலவஸ்துக்களை உயிருள்ளவையாகப் பார்க்கும் ஆன்மிக அறிவு ஏற்கெனவேயே இருந்தாலன்றி, ஒழுங்கு, அளவு, உருவம் என்னும் அழகைப் பற்றிய ஸ்தூலமற்ற கருத்தை நம் மனத்திலே தோற்றுவிக்க முடியாது. எக்குறையும் இல்லாத கண்களையுடைய பலர் மனக்குருடராயிருக்கின்றனர். பூரண செவிப் புலனுடையோர் பலர் உளச் செவிடராயுள்ளனர். ஆனால் இத்தகைய மனிதர், தாம் ஒன்றிரண்டு புலனறிவு இல்லாவிடினும் சங்கற்பம், ஆன்மா, உணர்ச்சிப் பிரவாகம், கற்பனை, ஆகியவற்றைப் பெற்றிருப்போருக்கு வரம்பு கட்ட முயலுகின்றனர். வாயால் வர்ணிக்க முடியாத அளவு பௌதிக உலகை விடப் பூரணத்து

வழும் எழிலுமுடையதோர் உலகை நிர்மாணிக்கும் வகையை நம்பிக்கை நமக்குப் போதிக்காவிடில், அந்த நம்பிக்கை வெறும் கேலிக்கூத்தாகும். நானும் கூட ஒரு சிறந்த உலகை நிர்மாணித்துக் கொள்ள முடியும். ஏனெனில் நான் கடவுளின் குழந்தை; எல்லா உலகங்களையும் படைத்த மனத்தின் துளிக்கு நானும் ஒரு வாரிசு.

நாம் எங்கு நோக்கினும் சரி, காலத்திலும், சரித்திரத்திலும் கரம் உழைப்பதையும், நிர்மாணிப்பதையும், புதியனவற்றைக் கண்டுபிடிப்பதையும், அநாகரிகத்தை அகற்றி நாகரிகத்தைப் புகுத்துவதையும் நாம் காண்கிறோம். சக்திக்கும் உழைப்பின் சிறப்புக்கும் அறிகுறியே கரம். மூல சக்திகளை இயக்குவிக்கும் வினைஞன் கரம், செதுக்கியும் அறுத்தும் வெட்டியும் நிர்மாணிப்பது கரம், ஒரு காட்டு மலரை ஓவியமாகத் தீட்டும் மென்மையான கரமோ, கிரேக்கப் பாணியில் ஜாடியை உருவாக்கும் கரமோ சட்டங்களை எழுதும் அரசியல்வாதியின் கரத்தையோ போன்று இவ்வுலகில் பயனுள்ளதேயாகும். கரத்தை நோக்கி ''நீ எனக்குத் தேவையில்லை!'' என்று கண் கூற முடியாது. ''கரமே நீ வாழ்க! உழைக்கும் கரங்களே நீங்கள் முக்காலும் வாழ்க!''

வாழ்க்கை தன் வீர்யம் முழுவதையும் கடந்த காலத்திலிருந்து பெறுவதில்லை. ஒவ்வொரு குழந்தை பிறந்ததும் சகல சம்பிரதாயங்களையும்—மனிதன் புகுத்தக் கூடியவற்றைத் தவிர்த்து—இயற்கை ஒதுக்கிவிடு கிறது. குழந்தை சுவாசிப்பதற்கோ, சிந்திப்ப தற்கோ, பேசுவதற்கோ, அல்லது தன் உறுப்புக் களை வன்மை பெறச் செய்வதற்கோ ஏற்ற சம்பிர தாயங்கள் எவையுமில்லை. எந்தச் சம்பிரதாயங் களைப் பற்றி புலம்பிக் கொண்டிருக்கிறோமோ அவை சோம்பல் நிறைந்த மனத்திற்கோ உறுதிப் பாடிழந்த மனத்திற்கோ, பற்றுக்கோடாக உள்ளனவா என்பதைப் பார்த்து, அப்படியிருப்பின் அவற்றை நாம் ஆதரிப்பதை விட்டுவிட வேண்டும். நம்முடைய நிறைவற்ற திருஷ்டி, அரைகுறை ஞானம், போலிக் கடவுள்கள், நம் உள்ளத்தையும் உடலையும் வாட்டும் நோய்கள் ஆகியவற்றைத் தூக்கியெறிந்து விடுவோம்; உயர்ந்த இலட்சியங் களை நோக்கிச் செல்லும் உறுதிப்பாட்டை வருங் கால சந்ததிக்கு அளிக்கவேண்டியதே நம் கடமை. நல்லெண்ணத்தையோ, நம்பிக்கையையோ ஆதா ரமாகக் கொள்ளாத பிரசாரமே நம்முடைய பிர தான ஆபத்தாகும்; மறைந்து போன எல்லைக் கற் களல்ல.

எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது, மனித சமுதாயத்தின் உயர்வான இயல்புகள் இன்னும் மறைந்தே கிடக்கின்றன என்பதை நான் நம்புகிறேன். புத்திக்கும் இதயத்திற்கும் உள்ள மகிமைகளை உன்னத ஆன்மாக்கள் வெளியிடுகின்றன. அவர்களைவிடத் தாழ்வானவர்களும் அந்த மகிமைகளைப் பெற்றிருக்கின்றனர்—அவை மறைந்து கிடக்கலாம். அற்புதமான ஒரு கவிதையை ஒரு வாசகன் ரசிப்பதற்கு மறைவாக இருந்தே உதவும் கவிஞனைப் போன்று, உதார குணத்தைக் கண்டதுமே, அதை அங்கீகரிக்கும் வாய்ப்பை, இயல்பாகவே அமைந்த நற்குணம் பெரும்பாலோருக்கு அளித்துள்ளது.

நம்பிக்கை, மற்ற நாடுகளின் சிந்தனைகளை வரவேற்று, கரங்களையும் பற்றிக் கொள்ளக்கூடியது. எந்த தேசமும் மற்றொரு தேசத்தை அடக்கி ஆள்வது விவேகமல்ல. அதனால்தான் சாம்ராஜ்யங்கள் சரிந்தன: இன்னும் சரிந்துகொண்டு வருகின்றன. அந்நியர் பண்பாட்டை, மொழி வேற்றுமைகளினால் புரிந்து கொள்வது சாத்யமாவதில்லை. குறிப்பாக, மற்றவர்களின் கருத்தைக் கேட்காமலோ, அல்லது கேட்க விரும்பாமலோ, தப்பபிப்ராயங்களுடன் அவர்களை அறிய முயல்வது அசாத்யமே. இரண்டு மனிதர்கள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை; என்றுமே யாரும் மற்றொருவனை முழுவதும் புரிந்து கொண்டதுமில்லை. மிக மிக அந்நியோந்நியமான ஆப்த நண்பர்களுங்கூட உண்மையிலேயே ஒரு வரையொருவர் அறிந்து கொள்வதில்லை. ஆயினும் வலிமையைத் தூண்டுவதற்குற்ற குறிப்புகளையும், உண்மையின் புதியவகைகளைப் பற்றிய ஞானத்தையும் ஒவ்வொருவரும் மற்றவரிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர். அதுபோல், ஒரு தேசம் தன்னிடம் எத்தகைய ஆன்மிக ஞானமும் பண்பாடும் உள்ளனவோ அவற்றை மற்றொரு தேசத்திற்குத்

தரமுடியும்; பிற தேசத்தின் கருத்துக்களைத் தன்னடக்கத்துடன் ஏற்றுக் கொள்ளவும் முடியும் —இந்தக் கருத்துக்கள் பெரும்பாலும் முற்றிலும் மாறுபட்ட அனுபவங்களிலிருந்து சேமிக்கப்பெற்ற வேறொரு வகையான ஞானமேயாகும். இவ்வகையில் இருதேசங்கள் தங்களுக்கிடையே ஒரு ஒருமைப்பாட்டைக் காண முடியும்; அந்த ஒருமைப்பாட்டில் அவர்களின் நம்பிக்கைகள் ஒன்று கலந்து, உண்மை ரீங்காரம் செய்யும். ஏற்கெனவே சில இடங்களில் இச்சமன்வயம் ஓரளவு ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட உலகத் திருநாளை நம்பிக்கை பரப்பிவிடும்.

இளவேனிற் காலமும், இலையுதிர் காலமும், விதைப்புக் காலமும், அறுவடைக் காலமும், மழையும் வெயிலும், கார் காலத்தின் குளிரும், கோடைக் காலத்தின் வெப்பமும் எல்லாம் மாறிக்கொண்டேயிருக்கின்றன. எல்லாப் பொருட்களின் ‘அநித்யத்’ தன்மையைப் பார்த்த பின்னரும், இறுதியான சாவைப்பற்றி ஏன் பேசவேண்டும்? வாழ்வையும் சாவையும் அஞ்சாநெஞ்சுடன் ஒரேவிதமாக நாம் ஏன் எதிர் நோக்கக்கூடாது?

அடிக்கடி எனக்கு ஒரு எண்ணம் எழுவதுண்டு; அதன் உண்மையைப் பற்றிய நம்பிக்கை, என்னுடைய கல்வி, கேள்வி களின் மூலம் மேலும் மேலும் உறுதியடைகிறது. நம்முடைய உள் வளர்ச்சிக்கு ஏற்ற அளவில் நம் சொற் செல்வம் இல்லை. குற்றங்களும், தீய மனச் சார்புகளும் தமக்கென ஒரு அகராதி முழுவதை யுமே கொண்டுள்ளன; ஆனால் நற்பண்புகளுக்கு ஒரு சின்னஞ் சிறு பக்கமே உள்ளது. ஒரு வேளை தீமையைப் போன்று பகுத்துப் பெயரிடப் பெறு வதற்கு நன்மை மறுக்கின்றது போலும். அது எப் படி ஆயினும் சரி, குற்றம் காண்பதைப் பற்றிய வார்த்தைக்கு ஈடு கட்டும் வகையில் நல்லது காண் பதைப் பற்றிய ஒரு வார்த்தையைக் கூட நான் காணவில்லை. பிரயோசனகரமான ஒரு கருத்தை அடையாளம் குறிப்பிடாமல் விட்டுவிடுவது, சின் னஞ் சிறிய, ஆனால் சக்திவாய்ந்த கிரணவீச்சுள்ள அளவைகளை இழப்பதைப் போன்ற ஒரு விரயமே யாகும். இதுகாறும் பயன்படுத்தப் பெறாத மூலா தாரங்களிலிருந்து தோன்றவிருக்கும் உலகத்திற் காக, நம்பிக்கையையும், உள்ளிருக்கும் கணக்கிட முடியாத எழில்களையும் பற்றிய நடைமுறைக் குகந்த சொற்கள் நமக்கு அதிகமாகத் தேவை.

உள்ளுறையான யதார்த்தங்களின் போக்கை நமது குருட்டுத் தனம் எள்ளளவும் மாற்றுவதில்லை. பார்வையுள்ள வர்க்கும் சரி, பார்வை யற்றவர்க்கும் சரி, அற்புத மான எழில் நிறைந்த உலகம் கற்பனையின் மூலமா கவே எப்போதும் தோன்றுகிறது. நீ எப்படி இருக்கிருயோ அப்படி இல்லாமல் வேறு ஒரு வனுக—அற்புதமானவனுக, உதார குணமும், நற்பண்பும் உடையவனுக—இருக்க விரும்பினுல், உன் கண்களை மூடிக்கொள்; கணநேரக் கனவில் நீ எப்படி இருக்க விரும்பினுயோ அப்படியே இருப்பாய்.

சரித்திரத்திலேயே நாம் தான் மகத்தான யந்திரங்களின் வாரிசாக இருக்கிறோம். பெருமையோடு அவற்றை மற்றொரு தலைமுறைக்குத் தத்தம் செய்கிறோம். ஆனால் உள்ளமும் உயிரும் ஒன்றாய் இணைந்து மறுபடியும் சிந்தித்தாலன்றி, நாகரிகம் மனிதத் தன்மையையோ, இரக்கத்தையோ பெறாது. பின் சந்ததிகளுக்கு கருவிகளை மட்டுமே அளிக்காலாமேயன்றி, மனத்தையும் மூர்த்திகரத்தையும் அளிக்க இயலாது. நமது சமீப தவறு கருவிகளைப் பூஜிப்பதே. அது ஒரு **'பலக்லாவாக'** மாறாது தடுக்க வேண்டும். ஊடுருவிக் காணமுடியாது மறைந்துள்ள இனிமையை ஆவியாய் வானுக்கு கொண்டு சென்று அழியாத இன்ப ஊற்றாக்கவல்ல ஒரே ஒருவரான ஆண்டவனை நாம் கைவிட்டுவிட்டோம். நாம் வெறும் பொருள்களல்ல, ஆன்மாக்கள்; பொருள்கள்கூட வேறு ஒருவகை ஆன்மாக்களே; கருத்துக்களாக மாறவேண்டி வாயின்றி குறையிரக்கும் ஆன்மாக்களே. கவிதை அவைகளுடைய பேச்சின் மொழிபெயர்ப்பு; அவற்றின் பிரார்த்தனை. நமது ஆன்மாக்களுக்குப் பிரதிநிதிகள் யாரும் கிடையாது. ஆன்மாவிற்காகக் கதறும் பிரம்மாண்டமான ஒரு இயந்திரத்திற்குப் பரிந்து பேசுபவர்களே நாம்.

இயேசுவானவர் அவதரித்த பொழுது கதிரவன் வானத்தில் நடன மாடியதாம்; வயதாகி வளைந்துபோன மரங்கள் நிமிர்ந்துகொண்டு புதிய தளிர்களைத் தோற்று வித்து, மீண்டும் மலர்களின் நறுமணத்தை நாலு திசைகளிலும் பரப்பினவாம்—இவ்வாறு கவிதை கூறுகிறது. இவை எல்லாம், ஒவ்வோராண்டும் கிறிஸ்துவக் குழந்தை பிறக்கும் பொழுதும் நம் இதயத்தில் என்ன நிகழுகின்றது என்பதற்கு அறி குறிகளேயாகும். கிறிஸ்துமஸ் நாளின் சூரிய ஒளியின் கிருபையைப் பெற்று நமது இயல்புகள்-ஒருவேளை நெடுங்காலம் தளிர் விடாமலிருந்திருக் கக்கூடும்—புதிய அன்பையும், புதிய கனிவையும், புதிய கருணையையும் புதிய இரக்கத்தையும் கொண்டுவருகின்றன. இயேசுவின் பிறப்பு எப் படிக் கிறிஸ்துவ வாழ்வுக்கு ஆரம்பமோ, அப்ப டியே கிறிஸ்துமஸ் நாளில் ஏற்படக்கூடிய ஆனந் தம் புத்தாண்டை ஆதிக்கம் செலுத்தவேண்டிய மனப்போக்கைத் துவக்கிவைக்கும்.

வறியோருக்கும்,

பெரும் பளுவைச் சுமந்திருப்போருக்கும் அறியாமையில் மூழ்கியிருப்போருக்கும் விரிவான அளவில் நான் சேவை செய்ய இயலாதபடி எனக்குள்ள விக்கினங்கள் தடுத்து விடுகின்றனவே என்ற எண்ணம் என்னை எவ்வளவு தூரம் வருத்தத்துக்குள்ளாக்குகின்றது தெரியுமா? ஆனால், ஜப்பானியர் சொல்வதைப்போன்று, நான் இச்சிக்கும் கிண்ணத்தைப்பற்றி எதற்காக முணுமுணுக்க வேண்டும்?

காலமென்னும் மகா சமுத்திரத்திலே மனிதப் பிறவிகள் சிறு துளிகளே என்பதை நான் அறிவேன். எந்த ஒரு இனமோ அல்லது மனிதனோ உயர்ந்தபட்சம் சாதிக்கக்கூடியதெல்லாம், தெய்விக மனத்தின் நோக்கத்தை சற்று ஆழமாக ஆராய்ந்தறிவதுதான். இதைச் சாதிக்கும் இனமோ அல்லது மனிதனோ, மிக உன்னதமான இலட்சியத்தைப் பூர்த்தி செய்யமுடியும்; எக்காலமும் நல்லெண்ணமெனும் நீரைப் பாய்ச்சுவதற்குற்ற மிகச் சிறந்த மார்க்கமே அந்த உன்னத இலட்சியம்.

எனக்கு ஆறுதல் அளிக்கும் மற்றொரு நம்பிக்கையுமுண்டு—கிரகங்களின் போக்கிற்கும் ஊர்க்குருவி பறப்பதற்கும் வழிகாட்டும் விழிப்புள்ள

தெய்வம் மனித விவகாரங்களைக் கவனித்து முயற்சியை வன்மைபெறச் செய்கிறது. கடவுள் நம்மிடத்தில், ''நேரடியான'' அக்கறை கொண்டுள்ளார் என்ற இந்த நம்பிக்கை, எதிரிகள் போலும், அந்நியர்கள்போலும் நாம் வாழும் தளர்ச்சி அடைந்த இந்தப் பழைய உலகிற்கு ஒரு புதிய பொலிவையளிக்கின்றது. நம்பக்கூடியவர்களுக்கு சக்தியைப்பற்றிய உணர்வை அது ஊட்டுகிறது. அக்கிரமக்காரர்களின் பேராசைகளையும் சூழ்ச்சிகளையும் கண்ணிகளையும் எதிர்த்து மனித சமுதாயம் வெற்றிபெற முடியும் என்று அவர்களை உறுதியாக நம்பச் செய்கின்றது. தங்களைச் சுற்றிக் கடவுளின் படைகள் முகாமிட்டுள்ளதை அவர்கள் அறிந்திருப்பதால், இராணுவத்தையோ கடற்படையையோ அல்லது வேறெந்தப் படையையுமோ கண்டு அவர்கள் அஞ்சுவதில்லை. ஒரு நாள் மனிதர்கள் எல்லோரும் அன்பர்களாகி விடுவர்; பூமிமீது வீசும் அமைதி, நல்லெண்ணமென்னும் சூரிய ஒளிபட்டு மனித ஆபத்துகளனைத்தும் மறைந்துவிடும் என்று அவர்கள் தங்களுக்குள்ளேயே உறுதி கொள்வார்கள்.

சிருஷ்டித்தேவனைப் பற்றிய இந்தக் கருத்து பலருக்குக் காலாவதியான ஒன்றாகத் தோற்றலாம் என்பதை நான் அறிவேன். சில சமயங்களில்

நான் அவருடைய குரலை என்னுள்ளே கேட்கத் தவறிவிடுகிறேன்; அப்பொழுது சந்தேகங்கள் என் மனதைச் சூழ்ந்து திணறடிக்கின்றன. ஆயினும் இந்த நம்பிக்கையை என்னால் கைவிட முடியாது. கைவிட்டால், இருள் சூழ்ந்த இந்த உலகில் எனக்கு ஒளியே இருக்காது.

"நட்பின் வரலாறே'' என் வாழ்க்கை. என் நண்பர்கள் என்னைச் சுற்றிலுமிருப்பவர்கள்—தினந்தோறும் என் உலகத்தைப் புதிதாகச் சிருஷ்டிக்கிறார்கள். அவர்களுடைய அன்பு நிறைந்த கவனிப்பு இல்லாவிடின், வாழ்க்கையை எதிர்நோக்குமளவிற்கு என் இதயத்தைப் பலமுள்ளதாக வைத்திருப்பதற்கு எவ்வளவுதான் என் சொந்த தைரியத்தை வரவழைத்துக்கொண்டாலும் போதாது. ஆனால் கற்பனை செய்வதைவிடக் காரியத்தில் ஈடுபடுவதே சிறந்தது என்பதை ஸ்டீவன்ஸனைப் போன்று நானுமறிவேன்.

கரத்தின் சக்தியை கிரஹிக்க முயலும்போது, அதில், மனிதனின் உண்மையான சித்திரத்தை, மனிதவளர்ச்சியின் கதையை, உலகிலுள்ள பெருமை சிறுமையின் அளவை நீ காண்பாய். அதனுடைய துணிவும் உறுதியும் வைராக்யமுமே மனித இனத்தின் சௌக்யமனைத்தையும் உருவாக்கித் தருகின்றன. உழைத்து உரம்பெற்ற வலிமைமிக்க கரங்களின் மீது வைக்கும் நம்பிக்கையையே ஒவ்வொருவரின் வாழ்வும் சார்ந்திருக்கிறது. ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கான மக்கள் ரெயில் வண்டியில் ஏறி, என்ஜினை இயக்குவிக்கும் கருவியைப் பற்றியுள்ள கரத்தினிடம் தங்கள் உயிர்களை ஒப்படைக்கின்றனர். இத்தகைய பொறுப்பு கற்பனையைக் கிளறிவிடுகிறது! ஆனால் இதைவிட ஆழமானது மற்றொரு சிந்தனை—மனித சமுதாயத்தின் அன்றாட வாழ்வும் அதிர்ஷ்டமும் இனந்தெரியாத எண்ணற்றக் கரங்களைச் சார்ந்துள்ளன; இக் கரங்களிருப்பதை உலகிற்கு நினைவூட்டும் பொருட்டு நாடகப்பாணியில் இவை எப்பொழுதுமே உயர்த்தப் பெறுவதில்லை.

மகத்தான ஒரு துக்கத்தை அனுபவிப்பது ஒரு குகைக்குள் நுழைவது போன்றதாகும். இருளும் தனிமையும் வீட்டைப் பற்றிய ஏக்கமும் நம்மைத் திணறடிக்கும். வேதனை நிறைந்த எண்ணங்கள் அந்த இருளிலே நம்மைச் சுற்றி வௌவால்களைப் போன்று வட்டமிடும். துன்பமயமான அந்தச் சிறைக்கூடத்திலிருந்து நாம் தப்பிக்க முடியாது என்றே நமக்குத் தோன்றும். ஆனால், பகவான் தமது அன்பு கனிந்த கருணையின் விளைவாக கண்ணுக்குத் தெரியாத சுவரிலே நம்பிக்கை விளக்கை ஏற்றி வைத்துள்ளார்; அதனுடைய ஒளிக்கிரணங்கள் சூரிய ஒளியால் பொலிவுபெறும் உலகிற்கு, தொழிலும், நண்பர்களும், சேவையும் நமக்காகக் காத்திருக்கும் உலகிற்குச் செல்ல வழிகாட்டும்.

"அறிவே சக்தி."

இல்லை, அறிவே இன்பம். ஏனெனில் அறிவை— ஆழ்ந்த, விரிந்த அறிவைப் பெற்றிருந்தால், தவருன குறிக்கோள்களிலிருந்து உண்மையான குறிக்கோள்களேயும், தாழ்வானவற்றிலிருந்து உயர்வானவற்றையும் பகுத்துப் பார்க்கமுடியும். மனித முன்னேற்றத்திற்கு வழிவகுத்த எண்ணங்களேயும் செயல்களேயும் அறிந்துகொள்வது, கால வெள்ளத்தையும் கடந்து மனித சமுதாயத்தின் மகத்தான இதயத் துடிப்புக்களே உணர்வதாகும். இந்தத் துடிப்புக்களிலே மோட்சலோகத்தை நோக்கிச் செல்லும் முயற்சியை ஒருவன் உணரா விட்டால், அவன் வாழ்க்கையின் கீதங்களேப் பொறுத்தவரை செவிடனுகவே இருக்கவேண்டும்.

குருடர்களுக்கு ஏற்பட்டுள்ள நாசம் பிரம்மாண்டமானது, ஈடுகட்ட முடியாதது. ஆயினும் முக்கியமான சேவை, நட்பு, ஹாஸ்யம், கற்பனை, ஞானம் ஆகிய விஷயங்களில் எங்களுக்குள்ள பங்கை குருட்டுத்தனம் பறித்து விடுவதில்லை. உறுதிபெற்ற உள்ளுணர்ச்சியே ஒருவனது தலை விதியை நிர்ணயிக்கிறது. நல்லவர்களாயிருக்கவும் அன்பு காட்டி அன்பைப் பெறுவதும், எண்ணுவதும் நமக்குச் சாத்தியமே. ஆன்மிக ரீதியில் பிறக்கும் இந்தச் சக்திகளைக் கடவுளின் இதர குழந்தைகளைப் போன்றே நாங்களும் பெற்றுள்ளோம். எனவே நாமுந்தான் சினையின் இடிகளைக் கேட்கிறோம். மின்னல்களைப் பார்க்கிறோம். பாலைவனங்களின் வழியாகவும், மகிழ்ச்சியூட்டும் ஏகாந்தமான இடங்களின் வழியாகவும் நடந்து செல்கிறோம்; அப்படிச் செல்லுங்காலை, பாலைவனமும் ரோஜாச் செடியைப்போன்று பூத்துக் குலுங்குமாறு பகவான் அருளுகிறார். ஆன்மாவின் செல்வங்களையும் கண்ணால் காணாத நித்யத்துவ இயற்கையையும் பெறும் பொருட்டு நாமும் கூட மோட்ச சாம்ராஜ்யத்திற்குச் செல்லுகிறோம்.

உலகில் வாலிபம் இருக்கும் வரை நாகரிகம் பின்னேக்கிச் செல்வ தென்பது சாத்தியமல்ல. வாலிபம் பிடிவாதமா யிருக்கலாம்; ஆனல், அதற்கென்று ஒதுக்கப்பெற் றுள்ள அளவிற்கு அது முன்னேறத்தான் செய்யும். தீய சக்திகளான வறுமை, துன்பம், அறியாமை, போர், அவலட்சணம், அடிமைத்தனம் ஆகியவற் றிற்கெதிராகப் பன்னெடுங்காலமாக நடந்து வரும் போராட்டத்தில், வாலிபம் எதிரியை உறுதியாக்க வென்றே வந்துள்ளது. எனவேதான், புதிய தலை முறையின் அகந்தையைக் கண்டதும், பொறுமை இழந்து நான் விலகிச் சென்று விடுவதில்லை. அதன் மூலமாக மாத்திரமே இரட்சிப்பு வரமுடியும்.

மனித மனம் பிதுரார்ஜிமாகப் பெற்றுள்ளதைச் செழுமைப்படுத்தும்பொருட்டு பரிசோதனைகள் இப்போதுதான் துவங்கியுள்ளன. அவற்றை நிறைவேற்றுவதற்கு நம்மிடமுள்ள நம்பிக்கை முழுவதையும் திரட்டியாகவேண்டும். இப்போதுள்ள நிலைமையில், இருளிலிருந்து இருளைக் கக்கும் பாதாளத்துக்கு மிக அருகில் நாம் இருப்பதால், நம்பிக்கையின்மையின் காரணமாக அந்தப் பரிசோதனைகளைக் கைவிட்டு விடும்படி நேரிடலாம். பாதாளத்தையே நாம் உற்று நோக்கினால் அது நம் உள்ளத்தை நோக்கத் தொடங்கி விடும்; நம்மையும் இருள் சூழ்ந்து கொள்ளும். நாசகரமான இந்தப் பழக்கத்தைத் தகர்த்தெறிய வேண்டும். இது உள்ளத்தைச் சிதைக்கும் சம்பிரதாயங்களை நீடித்து, பக்தனைத் தனது சமய நம்பிக்கை முழுவதிலும் பங்கு கொள்ள விடாமல் தடுத்து விடுகிறது. முன்னேற வேண்டுமாயின், ஆபத்துக்குள்ளாகும் துணிவு கொள்ள வேண்டும்.

நாம் பின்பற்றும் உயர்ந்த கொள்கைகள், அடக்கு முறைக்கோ, அழிவுக்கோ உள்ளாகும் ஆபத்து நேரிட்டால், அந்தக் கொள்கைகளின் ஒரு பகுதியே, அதுவும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரமே மறைக்கப் பெறும். அழிக்க முடியாத தெய்விக வலிமையின் மூலமாக அவை வளரத் தொடங்கி விடும். அந்தத் தெய்விக வலிமை தைரியமில்லாத, ஊர் பேர் தெரியாத, சாதாரண சிஷ்யர்களை நன்மை பயக்கும் ஆக்க சக்தியாக மாற்றி விடுகிறது. அந்தச் சக்தியே ஆத்மிகத்துறையிலும், லௌகிகத் துறையிலும் மனித இனத்தின் சரித்திரத்தை உருவாக்குகிறது. இந்தக் கொள்கைகள் எல்லாம் எப்பொழுதுமிருந்ததை விட மிகக் கடினமான வகையில் முந்திக் கொண்டு வருவதால் தான் உலகில் இவ்வளவு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது என்றே நான் நம்புகிறேன். தூக்கி எறியப் பட வேண்டிய சக்திகளின்—பேராசை, வெறுப்பு, அச்சம், தப்பபிப்ராயம், சகிப்பின்மை ஆகிய சக்திகளின் கடுமையான எதிர்ப்பை அது தூண்டியுள்ளது. ஆரம்ப காலத்தில் இருந்தது போலவே இன்றும் உள்ளது—பாதாளத்தின் விளிம்பில் இருள் நிற்கிறது. கடவுளின் ஆன்மா நீரின் மேல் மிதந்து கொண்டிருக்கிறது. விரைவில் உண்மை

யான மீட்சித் திருநாளில் ஒளி மேன்மேலும் பிரகாசமாகத் தெரியும்; அந்த ஒளியிலே பூமியிலேயே மோட்சத்தை அமைக்கும் நாகரிகத்தை நாம் காண்போம்.

**வ**சதியற்ற, எளிய குடிசையை விட்டு அழகும் இனிமையும் வியப்பும் நிறைந்த நந்தவனங்களிடையே கதிரவன் ஒளி பாய்ந்து கவின் செய்யும் ஒரு மாட மாளிகைக்கு நமது அருமை நண்பனெருவன் குடிபோகக்கூடிய நல்ல அதிர்ஷ்டம் பெற்று விட்டால், அதற்காக நாம் அழுது கண்ணீர் சிந்தமாட்டோம். அந்த நண்பன் ஒரு அதிர்ஷ்டசாலி என்றே சொல்லு வோம். சிறிதளவு சோகம் தோய்ந்த ஏக்கத்து டன், நமது அன்றாட வேலைப் பளுவையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, எழிலும் ஒளியும் உறைந்த அந்த வீட்டிற்குச் சென்று அவனுடன் பொழுதைக் கழிக்கும் நன்னுளை எதிர்பார்த்துக் கொண்டிருப் போம்.

இரவிலே எவ்வளவு அற்புதங்கள் நிறைந்துள்ளன என்பதைக் கவிஞர்கள் நமக்குப் போதித்துள்ளனர்; குருடு எனும் இரவிலும் அற்புதங்கள் இருக்கத்தான் செய்கின்றன. உணர்ச்சியின்மையும் அறியாமையும் நிறைந்த இரவு மாத்திரமே ஒளியற்ற இருளாகும். பார்வையில்லாதாரும், பார்வையுள்ளோரும் மாறுபட்டுள்ளோம், புலனறிவுகளிலல்ல, அவற்றைப் பயன்படுத்தும் விதத்தில்; புலனறிவுக்கு அப்பாற்பட்ட ஞானத்தைத் தேடும் கற்பனையிலும், துணிவிலும் மாறுபட்டுள்ளோம்.

வாழ்க்கை நீடித்து நிலைப்பதற்காக, போராடிக்கொண்டிருக்கும் இருளும் நிச்சயமின்மையும் ஒரு நாள் இரட்சண்ய ஒளியால் பிரகாசிக்கப் பெறும் என்பதை நாம் நம்புவது அவசியம். அந்த ஒளியை நேருக்கு நேராகக் காணும்போது வர இருக்கின்ற ஞானத்தின் அறிகுறிகளை இப்பொழுதே நாம் பெற்று விடுவோம்.

சிந்தித்துப் பாராத வர்களுக்கு விஞ்ஞானம் நம்பிக்கைக்கு மிகவும் புறம்பானதாகத் தோன்றலாம். ஆனல் அது இடையருது குறுகிய வாழ்க்கையை நீக்கிவிடும் படி நமக்குப் போதிக்கிறது. மக்களினத்தின் வாழ்வை வளம்பெறச் செய்யக் காணமுடியாத உலகின் உளவுகளை கற்பனைமூலம் கண்டு, அவற் றிற்காக யாவற்றையும் தியாகம் செய்யும் மகத் தான நம்பகம்தானே விஞ்ஞானம். புதியவை களைக் கண்டு பிடிப்பதும், அநுகூலங்களைக் குவிப்பதும், நோய் நொடிகளை எதிர்த்துப்போரிடு வதும் மனித குலத்தின் முன்னேற்ற உணர்ச் சியை ஊக்கும் உத்வேகங்களாகும். எளிதான நம்பகத்தின் மூலமே விஞ்ஞானம் மேலும் மேலும் இயற்கையின் மகத்தான உண்மைகளைக் கண்டு பிடிக்க முடியுமெனில் ஆழ்ந்த முழுமையான நம்பிக்கை மனித ஆன்மாவில் எத்தனை அதிசயங் களை விளைக்காது?

இந்த நம்பிக்கை வரலாற்றில் நம்முடைய பங்கு என்ன? நவீன மாந்தர்களாகிய நாம் எப்படி நடந்து கொள்ளுகிறோம்? புதிதாகக் காலடி வைத்த தேசத்தின் கடற்கரையில் நிராசை யுடனும் சோர்வுடனும் நின்று தவிக்கிறோம்.

ஒரு நாட்டு மக்கள் இவ்விதம் நரம்புத் தளர்ச்சியுற்று விழுவதையும், அடிப்படைகளெல்லாம் தகர்வதையும் காண நான் உயிருடன் இருக்கமாட்டேன் என்றே எண்ணியிருந்தேன். அணுக்களோடும், விண்மீன்களோடும் தோழமை கொண்டாடும் மனிதன் என்ற முறையில் இந்த ஆன்மிகத் தளர்ச்சி நமக்கு மிகமிக இழிவானதேயாகும்.

நாமெல்லாம் சுய நலத்துடனேயே வாழும் நோக்குடையவராதலால், இந்தப் போக்கைத் தணிக்கக்கூடிய ஏதாவது ஒன்று நம்முள்ளேயே இருக்கவேண்டியது அவசியம். மேலும் சிறந்த ஒரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ருல், அந்த வாழ்க்கையைப் பற்றிய ஞானம் ஓரளவாவது ஏற்கெனவே இருந்தாகவேண்டும். நாம் மேலும் மேலும் மிருகங்களாகாதபடி தடுத்துக் காப்பதற்கு வேறு சில உன்னதமான போக்குகள் நம்மிடம் இல்லையானுல், எதுதான் நம்மைக் காக்க முடியும்? நன்மையையும் தீமையையும் நாம் அறியாவிட்டால், சுதந்திரமாகவும் விவேகமுடனும் ஒரு சரியான பாதையை நாம் தேர்ந்து கொள்ள முடியாது.

நான் குருடி. வானவில்லைக் கண்டதில்லை. அதன் அழகைப்பற்றிக் கேட்டிருக்கிறேன். எனினும் அது எப்பொழுதும் அரைகுறையானதே என்பது எனக்குத் தெரியும். வானம் முழுவதையும் அது ஒருநாளும் வளைத்து நின்றதில்லை. இதைப்போல்தான் எல்லாம். நம்முடைய வாழ்க்கையும் இவ்வாறு சிதைந்துள்ளதே. அழியா அமரத்தன்மையை அடையும் பொழுதுதான் "உலகில் அறுந்துபோன வளைவுகள் வானின் முழுமையான வட்டம்" என்ற கவிஞன் **பிரௌனிங்** அவர்களது வார்த்தைகளின் உண்மையை நாம் உணர முடியும்.

இரக்கமின்மையையும், அநீதியையும் எதிர்த்து உன் இஷ்டம்போல் கிளர்ச்சி செய். கண்ட இடங்களிலெல்லாம் அநீதியைக் கொன்று தீர்க்க உன் வாளைக் கூர்மையாக வைத்துக்கொள். எனினும் எதிர்காலத்தின் அழியாத உன்னதத்தை மறந்துவிடாதே. இது கடவுளின் உலகம்; மேதைகளின் மகத்தான செயல்களைப் போலவே எளிய குழந்தைகளின் செயல்களும் நம்மை ஈசனிடம் அழைத்துச் செல்லுபவையே. உலகின் உயர்வுக்கு **லூதரையும், லிங்கனையும்** போலவே நீயும் அவசியமாகும்.

வாழ்க்கைப் பாலையைக் கருணையால் வளம் பெறச் செய்யும் கூட்டத்தில் சேர்ந்துகொள். உன் உயிரில் தெய்வ திருஷ்டி திகழட்டும். உன் வீடு, கல்லூரி, உன் உலகம் யாவும் அதனுல் வளம் பெறட்டும். உன் வெற்றியும் இன்பமும் உன்னிடந்தான் இருக்கின்றன. புறநிலைகள் வாழ்க்கையில் தற்செயலாகத் தோன்றுபவை; அன்பும் சேவையுமே என்றும் நிலைத்துள்ள உண்மைகள். இன்பமே நம்மை ஊக்குவிக்கும் புனிதமான தீ. இன்பமற்ற வேலை பயனற்றது. எப்பொழுதும் இன்பமாயிரு. துன்பங்களை ஓட்டும் படை, நீயும், உன் இன்பமுமே.

பழைய கருத்துக்களிலிருந்து விடுதலை பெறும் போக்கு மிகத் தாமதமானது. புதிய வாழ்க்கையை மனித இனம் தயக்கமின்றி உடனே ஏற்பதுமில்லை. ஆனுல் அதற்காக நான் மனமுடைந்து போவதுமில்லை. என்னைப் பொறுத்த வரை, பௌதிக சங்கடங்கள் தடுத்து நிறுத்திவிடுகின்றன; ஆனுல் இவையே இடர்களைக் கடந்து செல்ல வன்மைமிக்க சக்திகளையும் உற்பத்தி செய்கின்றன. உலகப் பிரச்னைகளைப் பொறுத்தவரையும் கூட இதுவே உண்மையாகும். தீமையின் பௌதிக சக்திக்கெதிராக நன்மையின் ஆன்ம சக்தியை ஒன்றுபடுத்த பலத்தை எல்லாம் திரட்டி நாம்தான் உழைக்கவேண்டும்.

நம் சக்திகளுக்கேற்ற கடமைகளுக்கு அல்லாமல் நம் கடமைகளுக்கேற்ற சக்திகளைக் கோரி நாம்தான் பிரார்த்திக்க வேண்டும். தூரத்திலுள்ள இலட்சியத்தை நோக்கிச் செல்லும் காலத்து, எப்பொழுதுமே நம் இதய வாசலில் துடித்துக்கொண்டிருக்கும் மகத்தான ஆவலுடன் நாம்தான் முன்னேறிச் செல்லவேண்டும்.

இப்பொழுதெல்லாம் என் நஷ்டங்களைப் பற்றி அநேகமாக நான் யோசிப்பதே கிடையாது. முன்பு, கலகத்தின் கசப்பான தருணங்களில் அவை என்னை வருத்தியது போல் இப்போது வருத்துவதில்லை. இதற்குக் காரணம் வாழ்க்கையில் மூடிய கதவருகில் அமர்ந்து எனக்கு இயல்பாக உள்ள உணர்ச்சி வெறிகளை எதிர்த்துப் போராட வேண்டியிருப்பதே யாகும். நானும் வாழ்கிறேன் என்பதற்குற்ற பிரத்யட்சச் சான்றுகளை என்னால் காட்ட இயலாதிருப்பதால் பலர் என்னிடம் பரிவு காட்டுகின்றனர், பெரும்பாலும் அகந்தையுடனே பழகுபவர். சில சமயங்களில், அவர்களுக்குத் தெரிந்துள்ள ஒவ்வொன்றையும் அறிய இயலாதபடி தடுக்கப் பெற்றுள்ள ''இந்த அப்பாவி''யை இழிவாக நோக்குவர். அங்காடிப் பேரிரைச்சல் நிறைந்த வர்த்தகப் பிராந்தியம் ஒன்றில் என்னைக் காண நேரிடின், பிராட்வேயில் ஒரு பிசாசைக் கண்டது போன்ற அதிர்ச்சியைப் பெறுவர். அத்தகைய சந்தர்ப்பங்களில் எனக்குள்ளேயே முறுவலித்துக்கொண்டு, என் கனவுலகில் சஞ்சரிக்கத் தொடங்குவேன். தாங்கள் பார்ப்பதாக அவர்கள் கருதும் யதார்த்தமிருக்கிறதே, அதனுடைய கொடூர வதனம், இன்பமான

பிரமைகள் என்னும் முகமூடியால்—அவை பிரமைகளாயிருப்பின்—மறைக்கப் பெறுவிடின் நான் உயிர் வாழ்வதற்குரிய காரணமே இல்லா தொழிந்துவிடும். வரையறைகளுக்கு அர்த்த மிருந்தால் அவற்றைப்பற்றி ஒருவர் வீணுக வாதிட மாட்டார். வாழ்க்கையில் ஆனந்தமும் ஆர்வமும் நிறைந்திருப்பதைக் காண்பதால், உயிர் வாழ்வதில் அர்த்தமிருக்கிறது என்றே நான் கருதுகிறேன்.

நம்பிக்கைக்காக நாம் அசாதாரணப் பேறு பெற்றிருக்கவேண்டும் என்பதில்லை; கிரகிக்கும் சக்தி இருந்தால்போதும். பிறருக்கு அது இருக்கலாம், நம்மால் அதைப்பெற இயலாது என்பது வேண்டுமென்றே நமக்கு நாமே வரம்புகளை நிர்ணயித்துக் கொள்வதாகும். நமக்குள்ளே தோன்றும் எத்தகைய ஆச்சரியங் களுக்கும் எப்போதும் தயாராயுள்ளது, உயிர் வாழ்வதற்குற்ற உற்சாகத்தை நம் பிடியிலேயே வைத்திருப்பதாகும்; இது, எல்லா லௌகிகச் சம்பத்துக்களையும்விட அதிக மகத்துவமுடையது. சங்கேதக் கனவுகளையும், மனவெழுச்சிகளையும் நசுக்கி விடாத வகையில், நம் ஆன்மாவிற்குள் மென்மையாகக் காலடி எடுத்துவைத்தால், நாம் அடையக்கூடிய முழுமையையும் ஒருமையையும் நம் மனம் படிப்படியாகக் காண்பிப்பதைக் கண்டு பேராச்சரியமடைவோம். சற்றும் முறியாத எனது ஐம்பதாண்டுக் கால அனுபவத்திற்குப் பின்பு நான் நிரூபிக்க முடிந்தது. மேலெழுந்த வாரியான ஆழமற்ற வாழ்விலிருந்து ஆனந்தத் திற்குள் நம்மை இழுக்க நீண்ட இறக்கைகள் நமக்குத் தாமாகவே வளர்ந்துவிடும்.

பூரணத்துவமே ஒருவரின் சகல உணர்ச்சிகளையும், சோதித்துப் பார்த்து, தனதென்று கோரிப் பெறவேண்டிய பிரசித்த உலகுடன் இசைவோடு ஒன்றுபடுத்துவதே—ஆனந்தத்தைப் பற்றி எனக்குத் திருப்தி தரக்கூடிய ஒரு நிர்ணயமாகும்.

என்னுள் நிறைந்துள்ள அகந்தைகளை இசைவு பெறச் செய்யும் முயற்சியில் ஒரு பயனுமில்லை. என்னை நானே ஆழங் காண முடிவதில்லை. என்னால் விடையளிக்க முடியாத வினாக்களை நானே எழுப்பிக் கொள்கிறேன். என் இதயம் இன்பக் கடலில் திளைக்கும் என்று நான் எதிர்பார்க்கும் தருணத்தில், அது வேதனைக் குள்ளாகி விடுகின்றது. உதடுகள் முறுவலிக்கும் போது, கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிகின்றது. அன்பு, அமைதி, சகோதரத்துவம் ஆகியவற்றை நான் போதிக்கிறேன். ஆனால், அதே சமயத்தில் என்னிடம் குரோத உணர்ச்சிக ளிருப்பதை உணர்கிறேன். அந்தோ! வாளைச் சுழற்றி நான் போருக்குத் தயாராவதையும் காண் கிறேன்!

நேர்மையான நம்பிக்கை ஒவ்வொன்றும் நியாயமாக நடத்தப்பெற வேண்டுமென்று நான் கருதுகிறேன். ஆயினும், பொன்னைப் போற்றிப் புகழுபவரைக் கண்டு உரக்கக் கண்டிக்கிறேன். அமைதியும், சகோதரத்துவமும், சர்வ வியாபக அன்பும் நிறைந்த பரிபூர்ணம் வெகு தொலைவில் இருப்பதாகத் தோன்றும்பொழுது என் மன நிலையை நானறிவேன்; பிளவுப் பான்மையும், சண்டைக் குணமும் போருக்கான அணிவகுப்பில்

ஆர்வமும் என்னை ஆட்கொண்டு விடுகின்றன. ''உள்ளான்மாவைப் பற்றிய கடவுளின் விதியிலே நான் ஆனந்தம் பெறுகிறேன். ஆனால் என் உறுப்புக்களிலோ வேறொரு விதியை, என் மனத்தின் விதிக்கு எதிராக அவை போரிடுவதை நான் காண்கிறேன்,'' என்று பரிசுத்த **பவுல்** சொன்னது போலவே என் நிலைமையும் இருக்கின்றது. இறுதியில் அன்பு அனைத்தையும் சரிப்படுத்தி விடுமென்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆயினும் தங்களின் பிறப்புரிமைகளைப் பெறும்பொருட்டு பலாத்காரத்தைக் கையாளும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகும் அடிமை மக்களிடம் என்னால் அனுதாபம் கொள்ளாதிருக்க முடிவதில்லை.

உழைக்கவும் கற்றுக் கொள்ளவும் பெரும்பாலான மனிதரைத் தயாரிக்கும் அம்சங்கள் கடல் மணலைப் போன்று எண்ணற்றவை. ஆனால் பௌதிகப் புலன்களுக்குப் புலப்படாத நீடித்த யதார்த்தங்களை நமக்காக ஒளிபெறச் செய்வது நம்பிக்கையேயாகும். பார்வையோ, அல்லது செவிப் புலனோ இல்லாததால் தத்துவத்தைப் போன்று நம்பிக்கைதான் லௌகிக அனுபவமெனும் குழப்பத்தில் நான் இழந்து விடும் ஒரு ஒருமைப்பாட்டை எனக்கு அளிக்கிறது. ஆனால், மற்றவர்களைப் போன்று எனக்கும் மனக்கண் உள்ளது. நம்பிக்கையின் மூலமாக நான் சிருஷ்டித்துக் கொள்ளும் உலகை நான் பார்க்கிறேன்; எனக்கென்று பகலையும் இரவையும் உண்டாக்கிக் கொள்கிறேன்; வானவில்லிலுள்ளதைப் போன்று தகதகக்கும் வண்ணங்களை மேகத்தில் பூசுகிறேன்; வேறு நட்சத்திரங்கள் சிதறிக்கிடக்கும் நள்ளிரவையும் காண்கிறேன்.

ருசுவைப் பற்றி எனக்குக் கவலையே யில்லை. எதையாவது—நன்மையையோ — அழகையோ— அல்லது ஆனந்தத்தையோ — உண்மையில் நாம் ருசுப்படுத்த முடியுமா? ஆரோக்கியத்தை எப்படி வரையறுத்துக் கூற இயலாதோ, அதைப் போன்றே ஆனந்தத்தையும் வரையறுத்துக் கூற

முடியாது. ஆனால் உணர்ச்சியின் மூலம் அவற்றை நாம் அறிந்து கொள்கிறோம். வாழவேண்டுமென்பதே என் விருப்பம். எனவே நம்பிக்கையை என்னுள் அனுமதிக்காவிடில் எனக்கு மரணமே ஏற்படும்.

தோல்வி, உள்ளத் திறலைக் காட்டும் ஒரு வாயில்; உற்சாகமற்ற தினங்களுக்கு சுவையூட்டுகிறது; இரத்தத்திற்கு உர மூட்டுகிறது; கடுமையான வேலையையும் கூடப் பொலிவுள்ளதாக்கிவிடும். வெற்றி மகத்தானது தான், அவசியமானுல், தோல்வி அதையும் விட மகத்தானதாயிருக்கும் என்று கூறும் **வால்ட் விட்மனின்** கீதத்தினுடைய அர்த்தம் இதுதான்.

குறிப்பிட்ட பொருட்களில் மேலும் மேலும் அதிகமானவற்றைக் காணப் பழகுவதாலேயே கண்வளர்ச்சி பெறுகிறது. ஆயினும் மனிதனின் பௌதிகக் கண்களுக்கு உலகம் தட்டையாகத்தான் தோன்றுகிறது; பழங்காலத்தவருக்கு நக்ஷத்திரங்கள் எப்படித் தோன்றினவோ அப்படியே நமக்கும் தோன்றுகின்றன. விஞ்ஞானமே இந்தத் தோற்றங்களில் எல்லையற்ற புதிய அற்புதங்களையும் மகத்துவங்களையும் திறந்து காட்டியுள்ளது. தான் எதை விரும்புகிறதோ அல்லது எதை விரும்பவில்லையோ, அதையே ஒரு குழந்தை எந்தப் பொருளிலும் காண்கிறது. ஆனால் ஒரு ஆப்பிள் பழம் கீழே விழுவதில் இயற்கையிலுள்ள சர்வ வியாபகமான சக்தியின் ஒரு வகை வெளிப்பாட்டை **நியூட்டன்** காணும்போது சாதாரணப் பார்வைக்கு வெகுதூரம் அப்பாற் சென்றே அதைக் காண்கிறார். நம் ஆன்மாக்களைப் பொறுத்த வரையும் அதுவே உண்மையாகும். அன்றாடத் தொடர்புகளில் மறைந்து கிடக்கின்ற, புதிய வாழ்க்கைக்கான வாய்ப்புகளை மேலும் மேலும் பூரணமாகக் காணும்போது, நாம் வளர்ச்சி பெறுகிறோம். ஆனால் ஜீவாதாரமான இந்த உண்மையை, மறக்கும்போதோ, அல்லது புறக்கணிக்கும்போதோ, நம் புலனறிவுகள் நம்

மைத் தவருன வழியில் இட்டுச் சென்று விடுகின்றன. அதனுல்தான், நம் வாழ்க்கையின் சுற்றுச் சார்பிலே, நமக்களிக்கப்பட்டுள்ள உள் வாழ்க்கையின் மகத்துவத்தைக் காண பகவான் தந்துள்ள வாய்ப்புகளை எடுத்துக் காட்டுவதற்கும் தங்கு தடைகள் என்பவை அவசியமாகின்றன.

நாம் பிறப்பதற்கு முன்னர், நம் ஆன்மா இன்றுள்ள உணர்வைப் பெறுவதற்கு முன்னர், யுக யுகாந்திரங்களாக எங் கிருந்தோம்? நாம் இறந்து, நம் ஆன்மா இன் றுள்ள உணர்வை இழந்து மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்து, யுக யுகாந்திரங்கள் அழிந்தபின்னர் நாம் எங்கிருக்கப்போகிறோம்? வீண் கேள்விகள்; வெட்டித்தனமான ஆராய்ச்சி. ஆனால், ஆன்மா நித்தியத்துவமுடையதாயின், அதன் கடந்த காலத்தைப்போலவே எதிர்காலத்தைப்பற்றியும் அஞ்சவேண்டிய காரணமே கிடையாது. ஆனால் இவ்விதம் கருதுவதைவிட நமது வாழ்க்கை என் பது ''இரு நித்தியத்துவங்களுக்கு இடையேயுள்ள ஒரு பிரகாசமான காலம்'' என்று கொள்வதும், உண்மை, அழகு, சோபை, சாதனை ஆகியவற் றின் பெரும் பகுதி இங்கேயே—இப்பொழுதே அல்ல, அந்த நித்தியத்துவங்களில்தான் உள்ளன என்று நம்புவதுமே சிறந்ததாகும்.

ஆன்மிகக் கருத்துக்களைக் கண்டு சலிப்படைபவர்கள் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களுக்குத் தங்களின் வலிமையே தெரியாததால்தான் சலிப்படைகிறார்கள். அதன் விளைவாக, பிரகாசமிக்க எண்ணற்ற அற்புதமான விநோதங்களை—உள்நோக்கிச் சிந்திக்கக் கற்றுக்கொள்வதனால் கிடைக்கப்பெறும் விநோதங்களை — அவர்கள் இழந்து விடுகின்றனர். கடவுளுடனும், தன்னுடனும்கூடப் பரிச்சயமில்லாதவனே சலிப்படையும் மனிதனாவான். கடவுளை அறிந்து அன்பு செலுத்துவோருக்கு அவரைப்பற்றிச் சலிப்புத் தட்டுவதே இல்லை.

கண் பார்வையுள்ளோர் மிக எளிதில் ஒரு முடிவுக்கு வந்துவிடுகின்றனர். குருடரின் உலகம்—முக்கியமாக, குருடும் செவிடுமான ஒருவரின் உலகம்—தாங்களறிந்துள்ள, சூரிய ஒளிபெற்றுப் பூத்துக் குலுங்குகின்ற உலகினின்றும் முற்றிலும் வேறுபட்டது; அவர் உணர்ச்சிகளும் மனவெழுச்சிகளும் சாராம்சத்தில் மாறுபட்டவை; அவரது குறைபாடுகளால் அவர் உணர்வு அடிப்படையிலேயே பாதிக்கப் பெறுகிறது என்ற முடிவுக்கு வந்து விடுகின்றனர். அன்றியும், வண்ணம், இசை, ரூபம் ஆகியவற்றின் எழிலனைத்தையும் அனுபவிக்க இயலாதவர் அவர் என்று கற்பனை செய்துகொள்ளும் மற்றொரு தவறையும் அவர்கள் செய்கின்றனர். அழகு, ஒழுங்கு, ரூபம், அளவு ஆகியவற்றின் அம்சங்கள் குருடனாலும் ஸ்பரிசிக்கத் தகுந்தவையே என்பதையும், சௌந்தரிய விலாசமும், சந்தலயமும் புலனறிவைவிட ஆழமான ஆன்மிக விதியின் விளைவுகளே என்பதையும் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் எண்ணற்ற தடவை எடுத்துக் காட்ட வேண்டியது அவசியமாகும். ஆனால், கண் பார்வை யுடையோரில் எத்தனைபேர் இந்த உண்மையை மனத்தில் பதித்துக்கொள்கின்றனர்? ஐம்புலன்களுக்குத் தகுதியுடைய பார்வையும்,

செவிப் புலனுமுடைய ஒரு இனத்தின் மூளைக்கு குருடும் செவிடுமான மனிதனும் ஒரு வாரிசே என்பதையும், மௌனமான இருளில் ஆன்மா தன் சொந்த ஒளியையும் இசையையும் நிரப்புகிறது என்பதையும் ஆராய்ந்தறியும் சிரமத்தை அவர்களில் எத்தனைபேர் மேற்கொள்ளுகின்றனர்?

நம்பிக்கையிடமிருந்து நான் கோருவது சுகத்தையல்ல, சக்தியையே. ஜீவனுள்ள நம்பிக்கை முழுக்க முழுக்கத் தொந்தரவு நிறைந்ததேயாகும். வாழ்க்கையிலிருந்தும் அதன் கேடுகளிலிருந்தும் தப்பித்துக் கொள்ளும் மார்க்கத்தை அது காட்டுவதில்லை. ஆனால் எல்லாவித இடுக்கண்களும், இன்னல்களுமிருப்பினும் செழுமைமிக்கதோர் வாழ்வை அது நமக்களிக்கிறது. சரியாகப் புரிந்துகொள்ளப் பெறும் நம்பிக்கை அமைதியானதல்ல, துடிப்புடையது. தேடிப்பார்க்கவோ அல்லது காண்பதற்கோ முடியாத ஒரு கண்ணில் எவ்வளவு பார்வையிருக்குமோ அவ்வளவு சக்திதான் அமைதியான நம்பிக்கைக்கு உண்டு. துடிப்புடைய நம்பிக்கை பயமென்பதை அறியாது. பகவான் தன் படைப்புக்களைக் கைவிட்டு, உலகை இருளிடம் ஒப்படைத்துவிட்டார் என்று கூறுவதை அது மறுக்கிறது. வாழ்க்கை விதிக்கேற்ப அல்லாமல், இனம், நிறம், அபிப்பிராயம் ஆகியவற்றிற்கேற்பவே மனிதனை நிர்ணயிக்கவேண்டும் என்பதை அது மறுக்கிறது. வெறுப்பை நல்லெண்ணமும், இராணுவத்தைப் புத்திசாலித்தனமான ஒத்துழைப்பும் அகற்றிவிடக்கூடிய ஒரு சமுதாயத்தை அடைவது சாத்தியமல்ல என்ற

கூற்றை அது மறுக்கிறது. மனச்சோர்வுக்கும், அது இடமளிப்பதில்லை. தோல்வி என்பது மேலும், முன்னேறிச்செல்லவேண்டும் என்பதற் குற்ற ஒரு அறிகுறியேயாகும். நம்பிக்கைபால் உரம்பெற்று, மிகப் பலவீனமான ஜீவனும் அழிவைவிட வன்மையுடையவனாக முடியும். அவனுள்ளிருக்கும் இறைவன் பிரபஞ்சத்தையும் எதிர்க்கும் உறுதியை அவனுக்கு அளிக்கிறான்; எந்த ஒரு ஆபத்தையும் எதிர்நோக்கும் முழுமை யான சக்தியாகி விடுகின்றது அவன் ஆன்மா.

மிகமிகத் திண்மை யான இந்த விக்கினங்கள் எல்லாம் மறைந்து போகவேண்டுமென்று நான் சில சமயங்களில் விரும்புவதுண்டு; அவற்றின் தாக்குதலுக்காளாகி நசிவுறுவதை நான் உணருகின்றேன். நித்தியத்துவ மான அர்த்தத்தில் பார்த்தால், என்னால் பார்க்க முடியும், கேட்கவும் முடியும் என்பதை நான் நன்ருக அறிந்துள்ளபோதே, அல்லும் பகலும் இடை யருது வந்து குவியும் கடிதங்களும், என்னைத் திண றடிக்கும் பாராட்டுரைகளும் என்னால் பார்க் கவோ, கேட்கவோ முடியாதென்பதை எனக்கு நினைவூட்டிக்கொண்டே யிருக்கின்றன. தன்னால் சூழப்பெற்றுள்ள எந்த ஒரு தீவையோ அல்லது தீபகற்பத்தையோவிடக் கடல் பெரியது; அதே போன்று எந்தப் புலனுணர்ச்சியையும் விட ஆன்மா மகத்தானது. எல்லையற்ற கருத்துக் கடல் அதனிடம் உண்டு; அவை புதிய உண்மை களையும், அவற்றிற்கேற்ற ஒரு வாழ்க்கை வகை யையும் தருகின்றன. நான் குருடுமல்ல, செவிடு மல்ல என்று எனக்குள்ளே ஆழ்ந்த உறுதியான கருத்து, நான் என் உடலில் இருக்கிறேன், ஆனால் உடலால் இருக்கவில்லை என்ற கருத்தை ஒத்த தாகும். வெளித் தோற்றத்தில் நான் ‘‘குருடும் செவிடு’’மான ஹெலன் கெல்லரே என்பதை

அறிவேன். ஆனால் அது ஒரு அற்பாயுள் உள்ள ஒரு ஆன்மாவே; இங்கு நான் வாழவிருக்கும் ஒரு சில ஆண்டுகளை, இருளும் மௌனமும் நிறைந்த ஆண்டுகளைப் பற்றிக் கவலைப்படவே வேண்டியதில்லை. என் விக்கினங்களையே நான் கருவிகளாகப் பயன் படுத்துகிறேனே யன்றி, என்னையே யல்ல. அவற்றினால் பிறர் பயன் பெறுவார்களாயின், அதுவே எனக்கு விண்ணுலக இன்பமாகும். ஆனால் பார்வையின்மை, செவிப்புலனின்மை பற்றிய பிரச்சினைகளில் முடிவற்று மூழ்கிவிடுவதன் மூலம், புத்தகமெனும் ஜன்னல்கள் வழியாகப் பிரபஞ்சத்தை எட்டிப் பார்ப்பதோ, பொருட்கள் எழுப்பும் ஓசையைச் செவி மடுப்பதோ இயலாமற் போவதே எனக்குள்ள கஷ்டமெல்லாம்.

நோயாளியோ, அல்லது திடகாத்திரனோ, குருடனோ அல்லது பார்வையுள்ளவனோ, அடிமையோ அல்லது சுதந்திரமானவனோ, யாராயிருப்பினும் சரி, நாம் இங்கிருப்பதற்கு ஒரு குறிக்கோளுண்டு; நாம் எந்த நிலைமையிலிருப்பினும் சரி, எண்ணற்ற தோத்திரங்களையுமோ, அல்லது புனிதத் துறவறத்தையுமோவிட அதிகமாகப் பயன்தரத்தக்க செயல்களாலேயே நாம் பகவானை மகிழ்விக்க முடியும். பிரம்மாண்டமான கோவிலோ, அல்லது சிறிய கோவிலோ, எதுவாயிருப்பினும் அங்கு வாழ்க்கையின் ஸத்வகுணம் நிறைந்திராவிடில், அது சூனியமாகத்தானிருக்கும். கோவிலைப் பெரிதாகவோ சிறிதாகவோ ஆக்குவது கற்சுவர்களல்ல; அதைச் சுற்றிலும் ஒளி பரப்பிப் பிரகாசிக்கச் செய்யும் துணிகர ஆன்மாவின் ஒளியேயாகும். பலிபீடம் என்பது நமது இதய பீடத்தின் பிரதிநிதியாயிருந்தால் மாத்திரமே புனிதத் தன்மையுடையதாகும்; இந்தப் பீடத்தில் சமர்ப்பிக்க வேண்டுவது வெறுப்பை விட வன்மையுள்ள அன்பையும் ஐயமற்ற நம்பிக்கையையுமே.

பரோபகாரம் வாழ்க்கையின் முடிவாகும் என்று அடிக்கடி சொல்லப் படுகிறது; அது உண்மையே. ஆனால் ஆனந்தம் பரோபகாரச் சிந்தையைத் தோற்றுவித்து, அதற்கு உற்சாகமூட்டுகிறது. பல்வகைப் பேறுகளும், கிரகிக்கும் சக்தியும் உனக்கு இருக்கலாம்; உலகின் க்ஷேமத்தைப் பெருக்குவது எப்படி என்று அல்லும் பகலும் நீ ஆழ்ந்து யோசிக்கலாம். ஆனால் உனக்கு ஆனந்தமில்லாவிடில், அவற்றால் உனக்கு ஒரு லாபமுமில்லை.

இந்நாளில், நன்மையே உயர்ந்த கோட்பாடு என்று நம்புவது அக்கினி மிதித்தல் போன்ற ஒரு சிட்சையே ஆகும். ஆனால் அந்த நம்பிக்கையைக் கைவிட்டு விடுவதென்பது என்னைப் பொறுத்தவரை அதை விடக் கடினமான காரியமாகும். எந்தப் படுநரகத்தில் நாம் தூக்கி யெறியப்பட்டிருக்கிறோமோ, அதை மிகக் கசப்பான ஐயப்பாடுகளையுடைய நவீன சிந்தனையாளர்களும் கூட எதிர்பார்க்கவில்லை என்பது எனக்குத் தெரியும். அதனால் தான் கண்ணைக் குருடாக்கும் வேதனையையும், காதைச் செவிடாக்கும் பீதியையும் குணப்படுத்த நம்பிக்கை என்னும் மருந்து மிகமிக அவசியமாக இருக்கிறது. பரலோகம், இகலோகம் என்பவை மனிதனது நிராசை எனும் பாலைவனத்திலிருந்தும் எழும் கானலே என்று வலியுறுத்தப் பெறுகின்றது. நிராசை நம்பிக்கை உள்ள ஒவ்வொரு விநோதத்தையும் சாதிக்க முடியுமானால், நிச்சயமாக ஒரு அற்புத சக்தியேயாகும். ஆனால் எவனுக்கும் அவனது உலகம், பிறருக்கு எப்படித் தோன்றினாலும் சரி, அவனுக்கு உண்மையானதே; ஆனந்தத்தை ஆன்மா தங்கு தடையின்றிச் சுதந்திரமாகச் சுவாசிப்பதென்பதே அதற்கு அடிப்படையான அர்த்தம்.

அந்தக் கானலில் ஒரு பங்கு உண்டு. சாதாரணமாக உயிர் வாழ்வதிலேயே இன்பம் காணும் இளமைப்பருவ மிருகங்களிலிருந்தும், விளையாட்டில் ஈடுபடும் குழந்தைகளிடமிருந்தும், காதலுக்காக எல்லாவற்றையும் பணயம் வைக்கும் வாலிபர்களிட மிருந்தும், நீண்ட நெடுமுயற்சியின் விளைவாகத்தோன்றும் வெற்றிகளிலிருந்தும், சூறுவளிப் புயலுக்கெதிராகத் தனது கோயிலை ஒரு அரணுக்குவதற்கு வேண்டிய பொருட்களை நம்பிக்கை திரட்டிக் கொள்கிறது.

பிரிவு, மிகக்குறுகிய காலத்திற்கேயாயினும் சரி, ஏனோ பெரும் வேதனையை அளிக்கின்றது? மனக்கிளர்ச்சி என்பது முதற் காதலின் கனவு மறையும்பொழுது ஏற்படும் வருத்தத்தையும், தன் குழந்தை முதன் முதல் அடி எடுத்துவைப்பதைப் பார்த்தோ அல்லது முதற் சொல்லை உச்சரிப்பதைக் கேட்டோ அடையும் ஆனந்தத்தை நினைவு படுத்திக்கொள்ளும் தாயின் ஆவலையும் ஒத்ததே என நான் கற்பனை செய்கிறேன். பின்னர், வேதனையளிக்காத இன்பங்களே இல்லை; ஆனால் அந்த வேதனைகள் தாம் அவற்றை இனிமை நிறைந்தவையாக வைத்திருக்கின்றன.

கதிரவன் ஒளியால் எங்கும் ஒரே பிரகாசம். அச்சமயத்தில் திடீ ரென்று எங்கிருந்தோ எதிர்பாராதவிதமாக பனிப்படலம் ஒன்று வருகிறது; அதைத் தொடர்ந்து மற்ருெரு படலம்; இறுதியில் கதிர வனையே அவை மறைத்து விடுகின்றன; எங்கும் இருள் சூழ்ந்துவிடுகின்றது. ஆனல் அந்த நேரத் தில் கதிரவன் அங்குதான் இருக்கிருன் என்ப தைப் பற்றி நமக்குத் துளியளவும் ஐயமேற்படுவ தில்லை. வாழ்க்கையே "நமக்கும் கதிரவனுக்கு மிடையே உள்ள ஒரு பனிப்படலமே" என் ருன் யாரோ ஒரு கவிஞன். அது உண்மை என்றே நான் நினைக்கிறேன். நாம்—அதாவது நம்மு டைய ஆன்மிகப் பகுதி—நித்தியத்துவம் பெற் றதே; உண்மை அன்பும் ஆனந்தமுமாகிய கதி ரவன் நித்தியத்துவமுடையவனே. அவசரமும், ஆரவாரமும், லௌகிகமும் நிறைந்த வாழ்க்கை ஒரு மூடுபனிப் படலத்தை, ஒரு மேகத்திரையைப் போன்று நமக்கும் அந்தக் கதிரவனுக்கும் இடையே வந்து குறுக்கே நிற்கிறது.

# "நாளைக்கு!"

அடேயப்பா! இந்த ஒரு சொல்லில் எவ்வளவு வாய்ப்புகள் அடங்கியுள்ளன! இன்று தினம் எவ்வளவுதான் மனச் சோர்வளிக்கக்கூடியதாய்; கருமேகங்கள் சூழ்ந்ததாய்; பயங்கரங்களும், நோயும், சாவும் நிறைந்ததாய் இருப்பினும் சரி, நல்லது கிடைக்கும் என்று நம்பிக்கையூட்டும் நாளைய தினம் நமக்காகக் காத்திருக்கிறது. எனவே சாவையும் கூட, நம்பிக்கையும் நிறைவும் பெற்றுள்ள மற்றொரு நாளைய தினமாக நாம் கருதுவோமாக!

இன்று வெளித் தோற்றத்தில் ஒன்றும் நிகழ்ந்து விடவில்லை. ஆனால் எனக்கு உற்சாகமற்ற நாள் என்பதே கிடையாது. என்னுள்ளிருக்கும் ஆன்மா எப்பொழுதும் கூர்ந்துநோக்கி, பரிசீலித்து, தத்துவ—விசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. ஜன்னலுக்கு வெளியே என்னால் பார்க்க முடியாது, ஒருவரின் முகத் தோற்றத்தையும் என்னால் காண முடியாது; ஒரு குரலின் தொனியைக் கேட்க முடியாது. ஆயினும் செழுமை மிக்க அனுபவம் எனக்குக் கிட்டும் தருவாயிலிருக்கிறதே! கையின் ஒவ்வொரு அசைவும், ஒவ்வொரு காலடி ஓசையும், ஒவ்வொரு ஆனந்தமும் பகுத்துப் பரிசீலிக்கப்பெற்று, என் மனத்திரையிலே குறிக்கப் பெறுகின்றன. மனிதர்களிடத்திலுள்ள மிகச் சிறந்தவற்றை என்னால் எவ்வளவுதூரம் காண இயலுமோ அந்த அளவிற்குக் காண்கிறேன், என்று நான் கூறிய பிறகே எனக்கு திருப்தி ஏற்படும்.

இடுக்கண் வருங்கால்

அதைத் தேவ சிட்சையாக மதித்து, அமைதியுடனும் பயபக்தியுடனும் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்து ஒரு காலத்தில் நிலவியது. துரதிர்ஷ்டத்திற்குப் பலியானவர்களுக்கு ஒதுக்கிடம் தந்து, அவர்கள் தியானத்தில் மூழ்கி, இருள் சூழ்ந்த அந்த இடத்தில் எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவிற்குத் திருப்தியுடன் வாழுமாறு அவர்களை விட்டு விடுவதே அவர்களுக்குச் செய்யும் உதவி என்று கருதப்பட்டது. ஆனுல், இலட்சியமற்ற ஏகாந்த வாழ்வு ஆன்மாவை மெலிவுறச்செய்கிறதென்பதை நாம் இப்பொழுது அறிந்துள்ளோம். உடலைப் பொறுத்தவரையும் கூட அதுவே உண்மையாகும். தசைகளைப் பயன்படுத்த வேண்டும்; இன்றேல், அவை வலுவிழந்து விடும். நம்முடைய குறுகிய அனுபவத்தை எப்படியாவது கடந்து, நம் நினைவையும், கிரகிக்கும் சக்தியையும், அனுதாப உணர்ச்சியையும் பயன்படுத்தாவிடில், அவை செயலற்றுப் போகும். உலகில் உள்ள தடைகளையும்,ஆசை காட்டும் அம்சங்களையும். தோல்விகளையும் எதிர்த்துப் போராடுவதன் மூலமே நாம் மிக உயர்ந்த வாய்ப்புக்களை அடைகிறோம்.

## 'மாறுதல்'

வாழ்க்கை எனும் வீட்டின் வழியே ஜீவனூட்டும் காற்ருக இருக்கலாம்; ஆனுல் அது ஒரு நிலையான சக்தியல்ல. அமைதியும் முன்னேற்றமும் நம்முள் பதியுமாறு செய்வதற்கு நிரந்தரமான விஷயங்கள் தேவை—பூமியின் அழகும், விதைப்பு அறுப்புக்காலங்களும், காதலர்களின் புன்னகைகளும், உயிர்த்துடிப்புடன் இருப்பதிலேயே ஆனந்தங் கொள்ளும் வாலிபமும், தொழில் திறமையில் கொள்ளும் பெருமையும் தேவை. உள்ளத்தை அரிக்கும் அடங்காத ஆவலும், வேகத்திலுள்ள மோகமும், குவிந்து கிடக்கும் பொருட்களும் நாம் வாழ்வதற்கு வாய்ப்பு இல்லாமல் செய்து விட்ட இந்த யுகத்திலே, ஏனோ நிரந்தரமான அந்த பொக்கிஷங்களை எல்லாம் நாம் மறந்து விட்டோம்? சிறிதளவுடன் நாம் திருப்தியடையாவிடில் எவ்வளவு செல்வமும் நம்மை திருப்திப்படுத்த முடியாது. எளிய ஆரம்பங்களிலிருந்து மாத்திரமே, சிருஷ்டி, தடையின்றி சென்று கொண்டிருக்கிறது.

ஒரு சமயத்தில் நாம் அனுபவித்ததை, எப்போதுமே இழக்க முடியாது. சூரிய அஸ்தமனம், தண் மதியின் ஒளியில் குளித்து முழுகும் மலே, கடலின் அமைதியும் கொந்தளிப்பும்—இவற்றையெல்லாம் நாம் பார்க்கிரும்; இவற்றின் அழகை நேசிக்கிரும்; இவற்றின் திருஷ்டியை நம் உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்கிரும். எவற்றையெல்லாம் நாம் ஆழ்ந்து நேசிக்கிருமோ, அவையெல்லாம் நம்மில் ஒரு பகுதி ஆகிவிடுகின்றன. நம் அன்பிற்குரியோர் நமக்கருகிலிருந்து சிரித்து விளையாடி, வேலே செய்து அன்பு காட்டும்பொழுது எப்படி நாம் அவர்களே இழந்து விடுவதில்லேயோ, அப்படியே அவர்கள் இறந்த பின்னரும் கூட நாம் அவர்களே இழந்து விடுவதில்லே. உண்மையில் சாவின் எஜமானன் வாழ்க்கையே; தன்னுடையதை அன்பு என்றுமே இழக்க முடியாது.

பெரும்பாலான அனுபவங்களின் சாராம்சத்தைக் கால வெள்ளம் அழித்து, அவற்றை மானசிகமான கருத்துக்களாக்கி விடுகின்றன. மனத்தை உறுத்திய விஷயங்களில் பலவற்றைத் திருப்பிச் சொல்ல இயலுவதில்லை. அதே மனவெழுச்சிகளைத் திருப்பவும் பெறுவது கடினமல்ல என்பது மட்டுமா; மனச் சார்புகளை வரையறுத்துக் கூறுவதோ, அல்லது பிறருக்கு அவை எத்தகைய விளைவுகளை உண்டாக்கும் என்பதை விளக்குவதோகூடச் சாத்தியமல்ல. அவை எப்போதுமே நெகிழ்ச்சி பெற்றிருப்பவை. ஒருவேளை திட்டமான உருப்பெற்றாலும்கூட, சம்பந்தப்பட்டோர்க்கு அவை மாறுபட்டே தோற்றும். நம் வாழ்க்கையின் போக்கை மறைமுகமாக இயக்குவித்தவர்களின் மென்மையான நோக்கங்களைப் பகுத்துப் பார்ப்பதும் சாத்தியமல்ல என்றே எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் சிருஷ்டியின் போக்கைச் சம்பவங்களின் பசுமை பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கும்போது, அதை நாம் பூர்த்தி செய்து விட முடியாது. தாவர சாஸ்திரி, பரிசீலனைக்காக மலர்களைப் பிய்த்துப் பார்ப்பதைப் போன்று, மனவெழுச்சியைப் பகுத்துப் பார்க்க முயன்றால் அது அழிந்து விடும்.

தானது வித்திலே ஒரு பழ மரம் எப்படி இயல்பாகவே நம்பிக்கை வைத்து, வித்து முளைத்து வளர வளர அதன் நம்பிக்கையும் பெருகுகின்றதோ, அதைப் போன்றே நித்தியத்துவத்திலும் எனக்கு இயற்கையாகவே நம்பிக்கை உண்டாகி, அந்த நம்பிக்கை வளர்ந்து வந்துள்ளது. ஆனால் உயிர்ப்புள்ள அதன் உண்மைகளின் முழு மொத்தத்திற் கிடையில் ஜ்வலிக்கும் காலத்தில் மாத்திரமே அது ஆதாரமற்ற வெறும் நம்பிக்கையாகும். நித்தியத்துவம் என்பது இல்லாமலே, பகவானின் முகத்தை சிறிது நேரத்திற்காவது பார்ப்பதையும், அன்பிற்குரிய மனிதரின் கரத்தைப் பற்றிப் பிடிப்பதையும், ஒரு குழந்தையின் முகத்தைப் பெறுவதையும், ஒரு கண்ணாடியின் மூலமாக கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள பிரபஞ்சங்களை நோக்குவதையும் ஒரு அற்புதமான திருஷ்டியாகவே வெறும் நம்பிக்கை கருதும்.

தடைகளின் சுசப்பான மறுதலிப்புகளைப்பற்றி என்னைவிட அதிகமாக யாருக்கும் தெரியாது; தெரிந்திருக்கவும் முடியாது. என் நிலைமையைக் குறித்துத் தவருன பிரமைகள் எதுவும் எனக்கில்லை. எப்பொழுதுமே நான் வருந்துவதோ, ஆத்திரத்திற்குள்ளாவதோ கிடையாது என்று கூறுவது உண்மையல்ல; ஆனல் புலம்பித் தவிக்கக் கூடாது என்று நெடுநாளைக்கு முன்னரே உறுதிகொண்டுவிட்டேன். படுகாயமுற்ருேர் பிறருடைய நலனைக் கருதியாவது தங்கள் வாழ்நாளை உற்சாகமுடன் கழிக்க முயலவேண்டும். இந்தக் காரணத்திற்காகத்தான் புன்னகை தவழும் முகத்துடன் இறுதிவரை போராடும் தைரியமுடையதாய் நம் இதயமிருப்பதற்காகத் தான் மதம் என்பது இருக்கின்றது. இது மிக உயர்ந்த இலட்சியமாக இல்லாமலிருக்கலாம்; ஆனல் ஊழ்வினைக்கு அடிபணிந்து விடுவதிலிருந்து இது வெகுதூரம் அப்பாற்பட்டது. இந்த அளவிற்காவது ஊழையும் உப்பக்கம் காண வேண்டுமாயின், தொழிலும், நட்பின் ஆறுதலும், நன்மை செய்வதுபற்றிய தெய்வத் திட்டத்தில் அசையாத நம்பிக்கையும் ஒருவருக்கு இருக்க வேண்டியது அவசியம்.

மிக மிகச் சிலரே ஞானிகளாகவோ அல்லது மேதைகளாகவோ இருக்க முடியும். ஆனால் எல்லா மனிதர்களிடத்திலும் எப்போதுமே ஒரு சில விஷயங்களை எதிர்பார்க்க முடியும். அவர்கள் பிரியமுடன் பாராட்டும் தூய ஆனந்தம் ஒவ்வொன்றும் ''நல்லெண்ணத்தின் திரட்சி''யாகும்; அவர்கள் உற்றுநோக்கும் ஒவ்வொரு காட்சியும், செவிமடுக்கும் ஒவ்வொரு இசையும், பயபக்தியோடு ஸ்பரிசித்துப் பார்க்கும் சிங்காரமான அல்லது மென்மையான பொருள் ஒவ்வொன்றும் இன்பமயமான சிந்தனைகளைத் தட்டி எழுப்பிச் சிறகு கட்டிப் பறக்கச் செய்கின்றன; இந்தச் சிந்தனைகளை வறுமையோ, கவலையோ அல்லது துன்பமோ அழித்துவிடமுடியாது. அன்பிற்கும் நம்பிக்கைக்கும் குரலாய் அமைந்திருப்பது ஆனந்தமே; இதுதான் இறுதியில் சாசுவத வாழ்வின் சொல்லான ''நன்றாகச் செய்தாய்'' என்பதை வழங்கக்கூடியது.

இடுக்கண்களை எதிர்த்துப் போராடி, இருளிலே தட்டுத்தடுமாறித் திரியும் காலத்தில், ஆன்மிக உலகிலிருந்து உற்சாகமூட்டும் குரல்கள் முணுமுணுப்பதை நான் அறிவேன். அந்த மற்ற ஊற்றுக்களிலிருந்து புனிதமான ஆர்வம் பொங்கி வழிவதை நான் உணருகிறேன். பகவானின் இதய நாடிகளின் துடிப்புகளிலிருந்து எழும் இன்னிசை என்னை மெய்சிலிர்க்கச் செய்கிறது. கண்ணுக்குத் தெரியாத கொடிகளால் சூரியசந்திரர்களுடன் நான் இணைக்கப் பெற்றிருப்பதால், என்றுமே அணையாத அக்கினியின் ஜ்வாலை என் ஆன்மாவிற்குள்ளிருப்பதை நான் உணர்ந்து கொள்கிறேன். அன்றூடம் வீசும் காற்றிற்கு மத்தியிலும் தெய்விக மழை பொழிவதை நான் உணருகிறேன். இவ்வுலகிலுள்ள பொருட்களை எல்லாம், விண்ணுலகிலுள்ள பொருட்களுடன் பிணைக்கும் மகோன்னத சக்தியைப்பற்றிய உணர்வு எனக்குண்டு. மௌனமும், இருளும் என்னைச் சூழ்ந்துகொண்டிருந்தபோதிலும், சாவு என்னை விடுவிக்கும்போது ஆயிரமடங்குடைய திருஷ்டியை எனக்கு அளிக்கக்கூடிய தீபத்தை நான் பெற்றிருக்கிறேன்.

## புலனுணர்ச்சிகள்

ஏமாற்றம் மிக்கவை; இதுமட்டுமா, அவற்றின் பயன்கள் வார்த்தைகளால் பாகுபடுத்தக் கூடியதில்லே. கருத்துக்களேக் கேட்கிறேம், வண்ணங்களேப் பார்க்கிறேம், இசையைச் சுவைக்கிறேம் என்பவை எனக்கு விளங்குகின்றன. ஒலிக்கும் வண்ணங்கள் உண்டு என்கின்றனர், சாமர்த்தியம் என்பது காட்சியின் கனிவு என நான் கருதினேன். அது வெறும் சுவையைப் பற்றியது என்று இப்போது நான் அறிகிறேன். புலன் உணர்ச்சிகளேப் பற்றிய பல வார்த்தைகளில் சுவையே மிக மிக முக்கியமானதாகத் தெரிகிறது. வாழ்வின் பெரியவை சிறியவை எல்லாவற்றின் பேரிலும் சுவையே ஆட்சி செலுத்துகிறது. புலனுணர்ச்சிகளின் பாஷை முன்னுக்குப் பின் முரணனவை என்பது வாஸ்தவமே. ஐந்து புல வாயில்களோடு வாழும் மக்களேக் காட்டிலும் நான் என் வீட்டில் அமைதியோடு வாழ்கிறேன்.

இயேசுவின் போதனைகளுக்கேற்ப நாம் இந்தப் பூமியில் வாழ முடியும்; ''நீங்கள் ஒருவரை யொருவர் நேசியுங்கள்'' என்ற அவர் கட்டளைக்கு மனிதன் கீழ்ப்படியும் போது உலகிற்கு மகத்தான இன்பம் வந்து சேரும் என்பதை நான் நம்புகிறேன்.

மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள ஒவ்வொரு பிரச்சினையும், ஒரு சமயப் பிரச்சினை என்றும், சமூக அநீதி ஒவ்வொன்றும் ஒரு தார்மிக ரீதியில் இழைக்கப் பெறும் அநீதி என்றும் நான் நம்புகிறேன்.

கடவுளுடைய விருப்பத்திற்கேற்ப நாம் இந்த உலகில் வாழமுடியும்; விண்ணுலகில் போன்ற இந்தஉலகிலும் கடவுளின் விருப்பம் நிறைவேறும் போது ஒவ்வொருவனும் தன்னுடன் வாழும் மனிதர்களை நேசிப்பான்; தன்னிடம் பிறர் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறானோ, அப்படியே தானும் பிறரிடம் நடந்து கொள்வான் என்றும் நம்புகிறேன். ஒவ்வொருவருடைய நலனும் எல்லோருடைய நலனுடன் பிணைந்தே இருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

நாம் அன்பிலே வளர வேண்டுமென்பதன் பொருட்டே வாழ்க்கை நமக்கு அளிக்கப் பெற்றிருக்கிறது என்று நான் நம்புகிறேன். ஒரு மலரின்

வண்ணத்திலும் நறுமணத்திலும் கதிரவன் இருப்பதைப் போன்று என்னிலும்-என்-இருளில் ஒளியாகவும், என் மௌனத்தில் ஒலியாகவும் பகவான் இருக்கிறார் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

உண்மை யெனும் கதிரவனின் ஒளி சிதறிய கதிர்களாகவே இதுகாறும் மனிதர்மீது பிரகாசித்துள்ளது என்று நான் நம்புகிறேன். இறுதியில் இந்தப் பூமியிலே கடவுளின் இராஜ்யத்தை அன்பு நிறுவிவிடும்; சுதந்திரம், உண்மை, சகோதரத்வம், சேவை ஆகியவை அந்த இராஜ்யத்தின் அஸ்திவாரங்களாக அமைந்துவிடும் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

நன்மை எதுவும் மறைந்துவிடாது; நன்மையைப்பற்றி எதையெல்லாம் மனிதன் விரும்பினானோ, எதிர்பார்த்தானோ, அல்லது கனவு கண்டானோ அவையெல்லாம் எப்போதும் நிலைத்து நிற்கும் என்று நான் நம்புகிறேன்.

ஆன்மாவின் சாசுவதத் தன்மையிலே எனக்கு நம்பிக்கையுண்டு; ஏனெனில் என்னுள்ளே நித்யத்துவமான ஆசைகள் இருக்கின்றன. மரணத்திற்குப் பின் நாம் அடையும் நிலையை நமது நோக்கங்களும் எண்ணங்களும் செயல்களுமே உருவாக்குகின்றன என்று நான் நம்புகிறேன். நான் இங்கு

பெற்றிராத புலனறிவுகளை வரப்போகும் வாழ்க்கையில் பெற்றிருப்பேன்; அங்கே நான் நேசிக்கும் மலர்களின் வண்ணமும், மனிதர்களின் இசையும் பேச்சும் என் வீட்டைப் பொலிவு பெறச் செய்யும் என்று நான் நம்புகிறேன்.

இந்த நம்பிக்கை இல்லாவிடில் என் வாழ்க்கைக்கு அர்த்தமே கிடையாது. "இருளிலுள் ளஒரு இருண்ட தூணுகவேதான்" நான் இருக்கவேண்டும். தமது இந்திரிய நுகர்ச்சிகளின் முழுப் பலனையும் அனுபவிப்பவர்கள் என்னிடம் பரிவு காட்டுகின்றனர். ஆனால் நான் ஆனந்தமாக வசிக்கும் என் வாழ்வின் பொன்னான அறையை அவர்கள் பார்க்காததே அதற்குக் காரணம். என் வழி இருள் நிறைந்ததாக அவர்களுக்குத் தோன்றலாம்; ஆனால் என் இதயத்தில் ஒரு மந்திர விளக்கை நான் சுமந்து செல்கிறேன்.

எத்திசையும் திரும்பக்கூடிய பிரகாச மிக்க ஆன்மிக தீபமான நம்பிக்கை என் பாதையை ஒளிபெறச் செய்கிறது; கெட்ட சந்தேகங்கள் நிழலிலே பதுங்கி இருப்பினும், மோகனமயமான காட்டை நோக்கி நான் அச்சமின்றிச் செல்கிறேன். அந்தக் காட்டில் இலை தழைகள் எல்லாம் என்றும் பசுமையாகவே இருக்கும். இன்பத்தின் உறைவிடமாய் அவை திகழும்; அங்குக்

குயில்கள் கூடுகட்டி இன்னிசை பொழியும். பக
வான் முன்னிலையில் அங்கு வாழ்வும் சாவும் ஒன்
ருகவே இருக்கும்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1899
நன்கொடை எண்: 1899

பூரண
விநியோகஸ்தர்கள் :

## இந்தியா புக் ஹௌஸ்

புருஷோத்தம் பில்டிங்
193, மவுண்ட் ரோட், மதராஸ்-2

1, ஆந்திர தேவாங்க சங்கம் பில்டிங், காந்தி நகர்
பெங்களூர்-9

ரௌண்டு வெஸ்ட்
திருச்சூர்

3418-H, ராஷ்ட்ரபதி ரோட்
செகந்திராபாத்

எருச்ஷா பில்டிங்
249, டாக்டர் தாதாபாய் நௌரோஜி ரோட், பம்பாய்-1

யுனைடெட் இந்தியா அஷ்யூரென்ஸ் பில்டிங்
F. ப்ளாக், கன்னாட் ப்ளேஸ்
நியூ டெல்லி-1

1, லிண்ட்ஸே தெரு
கல்கத்தா-16

## பேர்ல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்

12, வாட்டர்லூ மான்ஷன்ஸ்
170, மஹாத்மா காந்தி ரோட்
பம்பாய்-1.